Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 பங்குனி 08 செவ்வாய்க்கிழமை (21-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:99

# யுத்தக் கைதிகள் மீளவும் உண்ணாவிரத முஸ்தீபு!

## அரச தரப்பில் இன்னமும் தீர்க்கமான முடிவு இல்லை

வவுனியா, மார்ச் 21

**தம்மை விடுவிக்கும் முயற்சியில் அரசு அக்கறையுடன் ஈடுபடாததை ஆட்சேபித்து விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் பதினொரு யுத்தக் கைதிகளும் இன்னும் இரண்டொரு தினங்களில் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்க முஸ்தீபு செய்துவருவதாக தெரியவருகிறது.**

பல தாக்குதல் சம்பவங்களின் போது விடுதலைப்புலிகளால் பிடிக்கப்பட்ட 15 யுத்தக் கைதிகள் தம்மை விடுவிக்க ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்ததும் -

பின்னர் அவர்களைப் பார்வை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டடம் இடிப்பு

புன்னாலைக்கட்டுவன்,மார்ச்21

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயத்தின் சேதமடைந்த கட்டடம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாக வலி.தெற்கு பிரதேச செயலருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வன்செயல்களால் சேதமடைந்த இந்தப் பாடசாலைக் கட்டடத்தைத் திருத்துவதற்கு வித்தியாலயத்தின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் முயற்சி மேற்கொண்டிருந்த சமயம் - கட்டடம் புல்டோசர் மூலம் இடிக்கப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து அப்பகுதி கிராம சேவையாளருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-3-133)

## குடாநாட்டுக்குள் நடமாட விசேட அ.அட்டையே போதும்

### படை அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்21

குடாநாட்டு மக்கள் குடாநாட்டின் எப்பாகத்திற்குச் செல்வதாயினும் இராணுவத்தால் வழங்கப்பட்ட விசேட அடையாள அட்டையை எடுத்துச் சென்றாலே போதும்.

புதிதாகப் பதவியேற்றுள்ள 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் காமினி ஜெயசுந்தர இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு பிரதிநிதிகளுடன் நேற்று யாழ்.ஞானம்ஸ் ஹோட்டலில் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மக்கள் தேசிய அடையாள அட்டையையும் விசேட அடையாள அட்டையையும் ஒன்றாகக் கொண்டு செல்வதில் ஏற்படும் சிரமங்கள் குறித்து மக்கள் குழு பிரதிநிதிகள் பிரிகேடியரிடம் சுட்டிக்காட்டியபோதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

பிரிகேடியர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது :-

யாழ்.மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இந்த அடையாள அட்டை விவகாரமும் முக்கியமானது என்பதை நான் உணர்கின்றேன்.

குடாநாட்டு மக்கள் இனிமேல் விசேட அடையாள அட்டைகளை மட்டும் சோதனைச் சாவடிகளில் காண்பித்து தம்மை அடையாளம் காட்ட முடியும். இதனை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வருமாறு சகல படைப்பிரிவுகளுக்கும் உத்தரவிடப்படும் என்றும் அவர் அங்கு தெரிவித்தார். (ஐ-5)

## எதிர்வரும் திங்களன்று 3 ஆவது விமானசேவை

### இன்று டிக்கெட் பெறலாம்

யாழ்ப்பாணம்,மார்ச்21

பலாலிக்கும் கட்டுநாயக்காவுக்கும் இடையிலான விமான சேவையில் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை வழமையான இரு சேவைக்கு மேலதிகமாக மூன்றாவது சேவையும் இடம்பெற இருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இந்த மூன்றாவது சேவைக்கும், எதிர்வரும் ஏப்ரல் முதலாம், இரண்டாம் திகதிகளில் இடம்பெறவுள்ள வழமையான இரு சேவைகளுக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## 602 பேரைக் கொன்ற தமிழ்க் குழு உறுப்பினர்?

### விசாரணை நடத்த உத்தரவு

கொழும்பு,மார்ச்21

மட்டக்களப்பில் படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழு ஒன்றைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் புரிந்ததாகக் கூறப்படும் 602 கொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டும் என்று தொல்லை தவிர்ப்புக்குழு மட்டக்களப்பு பிரதிப் பொலீஸ்மா அதிபரைக் கேட்டிருக்கிறது.

'மட்டக்களப்பு மக்கள்' என்ற பெயரில் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றில் பிரஸ்தாப தமிழ் இயக்க உறுப்பினர் பற்றியும், அவர் புரிந்த கொலைகள் தொடர்பாகவும் தகவல் வெளியிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்நபர் புரிந்த 602 கொலைகள் தொடர்பாகவும் விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்றை நியமித்தால் கொலைகள் தொடர்பான மேலதிக தகவல்களையும், சாட்சியங்களையும் வழங்கமுடியும் என்றும் அக் கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாக தொல்லை தவிர்ப்புக் குழு தெரிவித்துள்ளது.

நேற்று கொழும்பில் அமைச்சர் பட்டி வீரக்கோன் தலைமையில் கூடிய தொல்லை தவிர்ப்புக் குழு இந்தக் கடிதத்தின் நம்பகத் தன்மை பற்றியும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் குறித்தும் ஆராய்ந்தது. இது தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு மட்டக்களப்பு பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவிடுவது எனக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இக்கொலைகள் தொடர்பாக எவராவது தகவல் தர முன்வந்தால் அவர்கள் பற்றிய விவரங்களை இரகசியமாகப் பேணுமாறும் தொல்லை தவிர்ப்புக் குழு பிரதிப் பொலீஸ்மா அதிபரிடம் தெரிவித்துள்ளது.

## விலை உயர்வை கண்டித்து ஐ.தே.க. நேற்று பேரணி!

கொழும்பு,மார்ச்21

பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து ஐக்கிய தேசியக் கட்சியினர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

பொரளைச் சந்தியில் இருந்து மருதானை வரை இடம்பெற்ற இந்தப் பேரணியில் நூற்றுக்கணக்கான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

பேரணியின் முடிவில் மருதானையில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் தூதர் இன்று வருகிறார்



யாழ்ப்பாணம்,மார்ச்21

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் செல்வி லின்டா ஜோய் டபீல்ட் நான்குநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகிறார். அவருடன் பிரிட்டிஷ் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேணல் றொபேர்ட் கென்டல், இரண்டாவது செயலாளர் (அபிவிருத்தி) மார்ட்டின் போசன் ஆகியோரும் யாழ்ப்பாணம் வருகின்றனர். இங்கு தங்கியிருக்கும் போது அரச உயர் அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் மற்றும் மதத்தலைவர்கள், கல்விமான்கள் ஆகியோரை செல்வி லின்டா ஜோய் டபீல்ட் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

யாழ்ப்பாணத்தில் மனிதாபிமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அமைப்புக்களின் பணிகள் மற்றும் மூளாய், மானிப்பாய், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் பிரிட்டிஷ் உதவியுடன் மெற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களையும் இந்தக் குழுவினர் பார்வையிடுவர்.

வேறு சில வைபவங்களிலும் பிரிட்டிஷ் தூதர் கலந்து கொள்வார்.

## மன்னார் நகரப் பகுதியில் இரவிரவாக பெரும் தேடுதல்

### 3 புளொட் உறுப்பினர் கைது

வவுனியா,மார்ச்21

புளொட் அமைப்பின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் தமிழ்வாசன் உட்பட மூன்று புளொட் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் இரவு பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் நேற்று மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

மன்னார் நகரப் பகுதியின் முக்கிய இடங்களை நேற்று முன்தினம் இரவு 7மணியளவில சுற்றிவளைத்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடியில் இளைஞன் காயம்

வலிகிழக்கு,மார்ச்21

குப்பைக் குவியலிடையே பழைய பொருள்களைச் சேகரித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தார்.

இச் சம்பவம் நேற்று கோப்பாய் பகுதியில் இடம்பெற்றது. நீராவியடி கடையிற்சுவாமி கோவிலடியைச் சேர்ந்த வரதராசா தனபாலசிங்கம் (வயது 19) என்ற இளைஞரே காயமடைந்தார். (ஐ-180-9)

## அகதிகளை அனுப்புவது பற்றி ஜேர்மன் தூதரகம் விளக்கம்

கொழும்பு,மார்ச் 21

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட ஐயாயிரத்து 500 ஈழத் தமிழர்களை இலங்கைக்குத் திருப்பியனுப்பும் முடிவு நீண்டகாலப் பரிசீலனையின் பின்னரே எடுக்கப்பட்டதாக கொழும்பில் உள்ள ஜேர்மன் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்வுக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. அவர்கள் தமது சொந்த மண்ணிலேயே சுதந்திரமாக நடமாட முடியாத நிலை காணப்படுகின்றது. எனவே இந்த நிலையில் ஈழத்தமிழர்களை திருப்பி அனுப்பும் முயற்சியை உடனடியாகக் கைவிடவேண்டுமென தமிழ்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளை அடுத்தே ஜேர்மன் தூதரகம் இந்த அறிவிப்பை நேற்று விடுத்ததாகத் தெரியவந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டி தெற்கு அருள்மிகு நடனவிநாயகர் கோவில் புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம்

மேற்படி ஆலய மகா கும்பாபிஷேகம் பிரமாதி வருடம் பங்குனி மாதம் 10 ஆம் நாள் (23-03-2000) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நிறைவேறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் விநாயகர் அடியார்கள் அனைவரையும் கலந்து அபிஷேக ஆராதனைகளைக் கண்டு விநாயகரின் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் அதற்குரிய கிரியைகள் முதல்நாள் (22-03-2000) புதன்கிழமை நடைபெறும். அன்று பிற்பகல் 3 மணி தொடக்கம் எண்ணெய்க்காப்பு சாத்தப்படும். அடியார்கள் அனைவரும் வந்து தமது நேர்த்திகளைச் செய்து கொள்ளலாம்.

கும்பாபிஷேக நிகழ்வினைத் தொடர்ந்து 11 நாள்கள் அபிஷேகங்கள் நடைபெற்று 12 ஆம் நாள் மண்டலாபிஷேகம் காலை எட்டு மணி முதல் நடைபெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகிறோம்.

*விழாக் குழுவினர்*
ந.ஸ்ரீராம்குமார்,
ந.இலட்சுமணகுமார்
(இராமர் இலட்சுமணர் - இரட்டையர்)

பெருமாக்கடவை,
அளவெட்டி தெற்கு.
(74674)

## ஆசிரியர் சங்க கலந்துரையாடல்

எதிர்வரும் சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ள சமாதானப் பேரணி தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் பிற்பகல் 4.30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

இதில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம், வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஐ-9-4)

## விரிவுரைகள் அடுத்த மாதம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 1999 - 2000 கல்வி ஆண்டின் மருத்துவபீட, விவசாயபீட புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் அடுத்த மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

## முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம் 06 - 05 - 1923
மறைவு 22 - 03 - 1999

திருமதி
### பெல்லா இரட்ணபூசணம் சின்னத்துரை
(இளைப்பாறிய ஆசிரியை)

*"உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன் தம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்"*

அன்னாரின் நினைவு ஆராதனை நல்லூர் புனித ஜேம்ஸ் தேவாலயத்தில் நாளை (22.03.2000) புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறும். இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

36(16) மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
(74678)
தகவல்:
குடும்பத்தினர்.

## 30 ஆம் வருட பிறந்த தின நினைவு



நிஜமாக 21 - 03 - 1970
நினைவாக 07 - 07 - 1998

### திருமதி ஜெ. சுகந்தி

அம்புலி காட்டிய கைகள் - அன்பில்
தட்டி அழவைத்த கைகள்
அம்மி மிதிக்கின்ற போது - காலன்
அறை கூவலென்பதை அறியாது போனோம்
'அம்மா...!' முதற்குரல் கேட்டு - அறுபதில்
அரைவாசி ஆண்டுகள் ஆயின.
அம்மானே அம்மன்னில் மானியாய்
அம்மானடி அடைந்தது மேனோ?

திரு.திருமதி பா.சபாரட்ணம்,
மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய்.
(74648)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


## ராஜா
யாழ்ப்பாணம்
ரஜனிகாந்த், சௌந்தர்யா, ரம்யாகிருஷ்ணன், சிவாஜி மற்றும் பலர் நடித்த
### படையப்பா
காட்சிகள்
10.30, 2.30
(C/11349)

## நாகம்ஸ்
சுன்னாகம்
இன்று மட்டும்
அஜித், சிம்ரன்
நடித்த
*அவள் வருவாளா?*
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
நாளை முதல்
அம்மன்
(C/11429)

## லிபேட்டி
அச்சுவேலி
சுதாகர், ராதிகா
விஜயன், ரதி
நடிப்பில்
*நிறம் மாறாத பூக்கள்*
காட்சிகள் 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*
(74393)


## கண்ணீர் அஞ்சலி

திரு.ம.நவரட்ணராஜா
(திட்டமிடல் உதவியாளர்)
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அன்னம்மா மனுவேற்பிள்ளை

அவர்களின் பிரிவு ஆழ்ந்த கவலை தருகின்றது. அன்னாரின் பிரிவால் துயரமடைந்துள்ள அவரது குடும்பத்தினரோடு நாம் பங்குகொள்கின்றோம்.

- நலன்புரிச் சங்கம்
வலயக் கல்வித் திணைக்களம்
வடமராட்சி.

புலோலி
(C/11480)


## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

### 'முயற்சி'

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

சுயதொழில் வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

பயிற்சி நெறி :- புத்தகம் கட்டுதல்,
காலம் :- 3 மாதம் (சனி, ஞாயிறு)
தகைமை :- க.பொ.த (சா.த) வரை கல்வி கற்றிருத்தல்.

முடிவு திகதி :- 31.03.2000.

பயிற்சி நெறிக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி :-

*செயலாளர்*
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இலக்கம் :- 021-2416
(C/11476)


உ
ஸ்ரீ ராம ஜெயம்

## உபநயன பிரம்மோபதேச அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனி மாதம் 10 ஆம் நாள் (23.03.2000) வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரமும் திருதியை திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப நன்னாளில் முற்பகல் 9 மணி 20 நிமிடம் முதல் 10 மணி 40 நிமிடம் வரையிலான இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

மீசாலையூர், பிரம்மஸ்ரீ து.கல்யாணசுந்தரக்குருக்கள் - தைலாம்பாள் தம்பதிகளின் ப்ரபௌத்திரனும்
ப்ரம்ம ஸ்ரீ சு.பாலசுப்பிரமணியசர்மா - பார்வதி தம்பதிகளின் பௌத்திரனும்
ப்ரம்மஸ்ரீ க.சச்சிதானந்தக்குருக்கள் - வாலாம்பிகை தம்பதிகளின் தௌகித்திரனும்

எமது ஜேஷ்ட புத்திரனுமாகிய

சிரஞ்ஜீவி **வித்தியானந்தசர்மா** அவர்கட்கு

மீசாலை இலந்தைக்கூடல் வீரகத்திவிநாயகர், வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் திருவருளோடு யஜ்ஞோபவீதாரண பிரம்மோபதேசம் நிகழ்த்த பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதனால் அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதரராக வருகைதந்து குமாரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உபநயன பிரம்மோபதேச குரு: ப்ரம்மஸ்ரீ ச.சோமாஸ்கந்தக்குருக்கள் (மயிலிணி)

முகூர்த்த நிர்ணயம்: ப்ரம்ம ஸ்ரீ வி.பரமேஸ்வரன் ஐயர் (உடுவில்)

*இங்ஙனம்*
*தங்கள் நல்வரவை நாடும்*
*ப்ரம்ம ஸ்ரீ பா.முரளீதரக் குருக்கள் - நாகபூஷணி*
*தம்பதிகள்*

435, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(74618)


உ
ஓம் விஸ்வப்பிரம்மனே நமஹ!

## மங்களகரமான குதூகல ஆரம்பம்

நேற்று (20.03.2000) திங்கட்கிழமையன்று மக்களனைவரினதும் நலன்கருதி மிசின்கட் மட்டுமன்றி தொலைத்தொடர்பு சேவையினையும் இல:- 86, நல்லூர் குறுக்குவீதியில்

### பாலகிருஸ்ணா மிசின்கட் அன் கொமினிக்கேசன்

எனும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைத்துள்ளோம் என்பதை வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். இன்றும் என்றென்றும் உங்கள் தேவைகள் அனைத்தையும் சேவையாகப் பரிமாறுபவர்கள்

பாலகிருஸ்ணா மிசின்கட் அன்
கொமினிகேசன்
இல:-86, நல்லூர் கு.வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

உள்ளூர் இல:- 021-3502
வெளியூர் இல:-0094 21-3502
Fax:- 3502
(74674)

# யுத்தக்கைதிகளை விடுவிப்பதில் அரசு அசமந்தப் போக்கை கடைப்பிடிக்கிறது

## நாணயக்கார கூறுகிறார் இப்படி

கொழும்பு, மார்ச் 21

விடுதலைப்புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பதில் அரசாங்கம் தொடர்ந்து அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தால் கொழும்பில் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை கைதிகளின் உறவினர்கள் ஆரம்பிப்பர்.

காணாமற்போன படையினரின் உறவினர்கள் சங்கத் தலைவர் நாணயக்கார மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தம்வசம் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிக்க விதித்துள்ள நிபந்தனைகள் தொடர்பாகப் பேசுவதற்கு அரச பிரதிநிதி ஒருவரை வன்னிக்கு அனுப்புமாறு அங்கு சென்ற கைதிகளின் உறவினர்கள் மூலம் விடுதலைப் புலிகள் அரசுக்குத் தகவல் அனுப்பியிருந்தனர்.

அரசுத்தரப்பில் இருந்து இதுவரை எந்த விதமான பதிலும் அனுப்பப்படவும் இல்லை; இதற்காக பிரதிநிதி ஒருவரை அனுப்பநடவடிக்கை எடுக்கப்படவும் இல்லை.

வன்னி செல்வதற்காக இரு பிரதி அமைச்சர்களும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரும் அரசிடம் அனுமதி கோரியுள்ளனர்.

ஆனால் அரசு இன்னமும் அதற்கு அனுமதி வழங்கவில்லை.

இந்த விடயத்தில் அரசு அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்தால் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவோம் — என்றார்.

(இ-3)

# நீர்கொழும்பில்விமானம்தயாரிப்பு புலிகளுக்கு தொடர்பில்லையாம்

## பொலீஸ் அத்தியட்சகர் தகவல்

கொழும்பு, மார்ச் 21

நீர்கொழும்பில் ஜேர்மன் நாட்டு பிரஜை ஒருவரால் இரு ஆசனங்கள் கொண்ட சிறிய விமானம் தயாரிக்கப்பட்டமைக்கும் புலிகளுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்று பொலீஸ் தலைமையக பதில் அத்தியட்சகர் காமினி விஜயநாயக்கா தெரிவித்துள்ளார்.

விமானத்தைத் தயாரித்த ஜேர்மனிய கோடீஸ்வரர் பொலீஸாரினால் காவலில் வைக்கப்பட்ட பின் நீர்கொழும்பு நீதிவானினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலீஸார் நடத்திய விசாரணையில் அந்த நபர் இலகு ரக விமான என்ஜின் ஒன்றைச் சட்டவிரோதமாக இறக்குமதி செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

விமானத்தைத் தயாரித்த ஜேர்மனியரான உளிருலே (42 வயது) என்பவர் கட்டுநாயக்காவில் உள்ள சுதந்திர முதலீட்டு வலயத்தில் ஸ்கைவோப் என்ற கம்பனி ஒன்றின் நிர்வாக இயக்குநராகப் பணிபுரிகிறார்.

இலங்கையில் உள்ள தமிழ்ப் பெண் ஒருவரைத் திருமணம் செய்து இவர் இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுள்ளார். இவரது கம்பனியில் விளையாட்டுப் பொருள்களே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இக் கம்பனியில் முந்நூறு பேர் கடமையாற்றுகின்றனர். வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டி காரணமாக இவருக்கும் விடுதலைப் புலிகளுடன் சம்பந்தம் இருப்பதாக பொலீஸாருக்கு தவறான தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்தே அங்கு சென்ற பொலீஸார் விமானத்தைக் கண்டு பிடித்து இவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இவரது மனைவியின் தந்தையார் போக்குவரத்துச் சபையில் முக்கிய பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-க-164)

# வடக்கு-கிழக்கு நகரங்களைப் புனரமைக்க ஆசிய வங்கி உதவி

கொழும்பு, மார்ச் 21

வடக்கு—கிழக்கு மாகாணத்தின் நகரங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்படவிருக்கின்றன என்று அரசு அறிவித்துள்ளது,

நகர அபிவிருத்திச் சபை இதற்கென விசேட வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளதாகவும் —

இந்த நகரங்களின் பொது வசதிகளை அபிவிருத்தி செய்ய இந்தத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன என்றும் —

இந்தத் திட்டவேலைகள் மேற்கொள்ளப்படும் போது பாதுகாப்பு நிலைவரம் கவனத்தில் கொள்ளப்படும் என்றும் — அரசு தெரிவித்துள்ளது.

(இ-க-3)

## அதிபர் பதவி உயர்வு:

# நேர்முகப் பரீட்சைக்குச் செல்லத் தவறியோர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

அண்மையில் கொழும்பில் நடத்தப்பட்ட அதிபர்கள் பதவி உயர்வுக்கான நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்காதவர்கள் தமது பெயர் விவரங்களை உடனடியாகப் பதிவு செய்து கொள்ளுமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் என். தணிகாசலம் பிள்ளை சம்பந்தப்பட்ட அதிபர்களைக் கேட்டுள்ளார்.

நாளை புதன்கிழமைக்குள் 628/1, நாச்சிமார் கோயிலடியில் அமைந்துள்ள மேலதிக மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு அதிபர்களை நேரில் வருமாறு அவர் கேட்டுள்ளார்.

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை இங்கு நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வெகு விரைவில் அவை இடம்பெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக ஒரு தொகுதி அதிபர்கள் இங்கிருந்து கொழும்பு சென்றிருந்தமை தெரிந்ததே.

[இ-9]

## ஆலமரத்தில் ஏறியவர் விழுந்து காயம்

யாழ்ப்பாணம். மார்ச் 21

குழை வெட்டுவதற்காக ஆலமரத்தில் ஏறியவர் தவறிவிழுந்து படுகாயமடைந்தார்.

அல்வாய் வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தங்கராசா சிவரூபராசா (வயது 31) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் சுயநினைவிழந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(இ-15)

## பத்திரிகையாளர் சங்கமும் பங்குபற்றும்

நல்லூர், மார்ச் 21

யுத்தத்தை உடன் நிறுத்தி நீதியான, நியாயமான தீர்வு ஒன்றைத் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும் எனக் கோரி எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ள சமாதானப் பேரணியில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கமும் கலந்து கொள்ளும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

(இ-103)

## விவரம் சேகரிப்பு

வலி: வடக்கு, மார்ச் 21

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால்நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள பொதுக் கிணறுகள் மற்றும் சேதமடைந்த பாடசாலைகள் பற்றியவிவரங்கள்கோரப்பட்டுள்ளன.

(இ-86)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணக் கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவினரால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட பல்வேறு பயிற்சிகளில் பங்குபற்றிச் சித்தி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ். மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்குவார் என யாழ். கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவு செயற்திட்ட அலுவலர் அறிவித்துள்ளார்.

(இ-7)

# செய்திக் கொத்து

## உ. கிழங்குகள் திருடப்படுகின்றன

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 21

அச்செழுப் பகுதியில் கடந்த சில நாள்களாக விவசாயிகளினால் செய்கை பண்ணப்பட்ட உருளைக்கிழங்குகள் இரவு வேளையில் திருடப்பட்டு வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

விவசாயிகள் தமது விளைநிலங்களில் இரவுக் காவல் கடமையில் ஈடுபடாததைப் பயன்படுத்தித் திருடர்கள் உருளைக் கிழங்குகளைத் திருடி வருகின்றனர்.

(க-133)

## செஞ்சிலுவை தின பரீட்சை

தாளையடி, மார்ச் 21

உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையினர் யாழ். மாவட்டத்திலுள்ள கல்லூரிகள், பாடசாலைகளில் செஞ்சிலுவைச் சங்கம் பற்றியும் முதலுதவி, ஆரம்ப சுகாதாரம் தொடர்பான பரீட்சையை நடத்தவுள்ளனர்.

மேற்படி பரீட்சையில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசில்களும் 40 புள்ளிகளுக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

இப் போட்டியில் பங்கு பற்றிய கல்லூரி மற்றும் பாடசாலைகளுக்கு செஞ்சிலுவை பற்றிய நூல்கள் சஞ்சிகைகள் வழங்கப்படவிருக்கின்றன.

(ஐ-144)

## பாடசாலைகளுக்கு மரக்கறி விதைகள்

வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட மரக்கறி விதைகள், உரம் என்பன தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட 30 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து விவசாய ஆசிரியர் ஆலோசகரால் இப்பாடசாலைகளின் விவசாய ஆசிரியர்களிடம் பாகல், புடோல், டுபாய்ப்பூசணி, கீரை விதைகளும் தேசி உரமும் கையளிக்கப்பட்டன.

பாடசாலைகளில் விவசாய தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் முகமாகவே இவை வழங்கப்பட்டன.

(க-133)

## மூலஸ்தான அகழ்வு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 21

உரும்பிராய் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மூலஸ்தான அகழ்வு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தினை தென்னாசிய கலைகள் மற்றும் கலாசார நிலையப் பணிப்பாளர் ந. யோகராஜன் தொடக்கி வைத்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக லயன் அ. த. க. கிருஷ்ணராசா கலந்து கொண்டார்.

(க)

## கண்டாமணி பிரதிஷ்டை

கைதடி மார்ச் 21

கைதடி, கய்தறசிட்டி கந்தசுவாமி ஆலயத்தின் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மணிக்கோபுரத்தின் கலச அபிஷேகமும் புதிய மணி பிரதிஷ்டையும் நேற்றுத் திங்கட்கிழமை காலை நடைபெற்றன.

(க-74)

## மின்சாரம் வழங்கப்பட்டது

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 21

அச்செழுப் பகுதியில் பெரும்பாலான குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. மின்சாரம் வழங்கப்படாத சில வீடுகளுக்கும் விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது.

(க-133)

## விவசாயம் பாதிப்பு

நெடுந்தீவு, மார்ச் 21

சரவணை நாவெட்டி வாய்க்கால் அணைக்கட்டு திருத்தப்படாமையால் இதன் ஊடாக கடல்நீர் உட்புகுந்து விடுவதாகவும் நிலம் உவர்த்தன்மையடைவதால் விவசாய நடவடிக்கைகள் பாதிப்படைவதாகவும் இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(க-111)

## பதில் கடமை

தாளையடி, மார்ச் 21

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் கடந்த மூன்று மாதங்களாக விடுமுறையில் சென்றுள்ளமையால் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாள்களில் மட்டும் பளை வைத்தியசாலையில் இருந்து வரும் வைத்தியர் ஒருவர் பதில் கடமையாற்றுகின்றார்.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் இல்லாத காரணத்தினால் இப்பகுதி மக்கள் அவசர சிகிச்சை பெறுவதற்கு பளை மற்றும் சாவகச்சேரி வைத்தியசாலைகளுக்கே வெகு சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டிய நிலையிலுள்ளனர்.

(க-144)

## பழங்கள் பதனிடும் தொழிற்சாலை

தென்மராட்சி, மார்ச் 21

பழங்கள் பதனிடும் தொழிற்சாலை அடுத்த மாத நடுப்பகுதியில் சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கட்டடமொன்றில் இயங்கவுள்ளது.

இத்தொழிற்சாலைக்கென இருபது லட்சம் ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்கள் பட்டினிக்கு எதிரான அமைப்பினால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. இவை அடுத்த மாத முற்பகுதியில் பொருத்தப்பட்டு செயற்படத் தொடங்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிறுவனத்தினால் மீசாலை, சாவகச்சேரி ஆகிய பகுதிகளைச்சேர்ந்த 60 யுவதிகளுக்கு காய்கறி, பழவகைகள் ஆகியவை பதனிடுதல் பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

(க-117)

# ஈ. சி. ஜி. பேப்பர் இன்மையால்

# இருதய நோயாளர்கள் பாதிப்பு

## அவசர நோயாளருக்கு மட்டும் பயன்படுத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். போதனா வைத்திய சாலை, ஈ. சி. ஜி. பிரிவில் நிலவும் ஈ. சி. ஜி. எடுப்பதற்கான பேப்பர் சுருள் தட்டுப்பாட்டினால் இருதய நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் பெரும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தப் பேப்பர் சுருள் தட்டுப்பாட்டை அடுத்து பணிப்பாளரின் உத்தரவின் பேரில் ஈ. சி. ஜி. (இதயத்துடிப்பு) எடுப்பது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அவசிய, அவசர நோயாளர்களுக்கு மாத்திரம் என்ற நிலையில் இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், தீவிர சிகிச்சைப் பிரிவு, அதிதீவிர சிகிச்சைப்பிரிவு உட்பட சகல வார்ட்டுகளிலும் இருதய நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதில் தடங்கல் ஏற்பட்டுள்ளது. நோயாளர் பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பேப்பர் தொடர்பாக பல தடவைகள் கொழும்புடன் தொடர்பு கொண்டபோதும் இதுவரையிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

இதேபோலவே எக்ஸ்றே பிரிவில் நிலவும் பிலிம் தட்டுப்பாட்டினால் எக்ஸ்றே எடுப்பதில் இருந்து வந்த மட்டுப்படுத்தலும் நீடித்துக் கொண்டே செல்கிறது.

இந்த மட்டுப்படுத்தலினால் ஒருமாத காலத்துக்கு மேலாகக் கிளினிக்நோயாளர் தகுந்த சிகிச்சை பெற முடியாத நிலையில் இருந்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(இ)

## யாழ்ப்பாணம் மற்றும் மல்லாகம் நீதிமன்றுகள் தினமும் இயங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம், மல்லாகம் மாவட்ட நீதிமன்றங்களின் அமர்வுகள் இனிமேல் நாள்களிலும் இடம்பெறவுள்ளன.

மல்லாகம் நீதிமன்றத்தின் நீதிவானாக ... பணியை கடந்த புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதையடுத்து அந்த நீதிமன்ற அமர்வுகள் தினமும் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் இரண்டு நீதிமன்றங்களிலும் நீதிவானாக ஆர். ரி. விக்னராஜா கடமையாற்றியதால் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்களே இந்த நீதிமன்றங்களில் அமர்வுகள் இடம்பெற்று வந்தன.

தற்பொழுது மல்லாகம் நீதிமன்றத்துக்கு நீதிவான் நியமனம் செய்யப்பட்டதால் இரு நீதிமன்றங்களிலும் வேலை நாள்களில் தினமும் நீதிமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளதாக யாழ். நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ 5)

## சுற்றாடல் பாதுகாப்புக் கலந்துரையாடல்

சண்டிலிப்பாய், மார்ச் 21

வளச் சூழல், சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் மத குருமார்கள், காட்டுத் திணைக்கள அலுவலர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்வார்கள் என்று பிரதேச செயலர் பணிமனை நிர்வாக உத்தியோகத்தர் எஸ். செல்வராஜா தெரிவித்தார்.

(ஐ-135)

## சீநோரை இயக்க ரூ 60 லட்சம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

குருநகர் சீ—நோர் வலைத் தொழிற்சாலையை மீள இயங்கச் செய்வதற்கு வேண்டிய உதவிகளை வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபை வழங்கியதாகதொழிற்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

60 லட்சம் ரூபா நிதி உதவி இந்த அதிகார சபையினால் சீ—நோர் தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுதுஇந்த தொழிற்சாலைக்கு மின் பிறப்பாக்கி ஒன்றை வழங்குமாறு தொழிற்சாலை நிர்வாகம் வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

(இ-5)

## பெண் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

பிள்ளைகளைப் பராமரிக்கும் பொருட்டு கூலி வேலைக்குச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் வேலையால் வரும் போது தாக்கப்பட்டுக் காயமடைந்தார்.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மனோகரன் செல்வராணி (வயது 35) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

---

## முதலாமாண்டு நினைவலைகள்



### அமரர் விக்ரர் இம்மானுவெல் (J.P.)

(ஓய்வு பெற்ற பொலிஸ் சார்ஜன், திடீர் மரண விசாரணை அதிகாரி)

மண்ணக மலர்வு 07-04-1932 | விண்ணக வாழ்வு 21-03-1999

எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே
எம் இனிய அப்பாவே
அப்பா உன் பெயர் சொல்லி
அனுதினமும் மகிழ்ந்திருந்தோம்
இப்பாரில் அப்பா போல்
எவருமில்லை என்றிருந்தோம்
துயர்கடலில் எமைத் தவிக்கவிட்டு
நீங்கள் மட்டும் அவ்வுலகம் சென்று
ஆண்டு ஒன்று ஆனதையா
ஆறாது எம் துயரம் மாறாது உம் நினைவு
இறைவன் பாதத்தில் உம்
ஆன்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி,
அருமைப் பிள்ளைகள்,
மருமகள், உறவினர்கள்.

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை.

(74488)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் கந்தையா யோகலிங்கம்

தோற்றம்: 8-5-1952 | மறைவு: 20-2-2000

20-2-2000 அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத்தெய்வம் கந்தையா யோகலிங்கம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21-3-2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும் இந்நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு சகல வழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

இராஜ வீதி,
அச்சுவேலி.

(74557)

---

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



"வாழ்வு தந்த தெய்வம் வானம் சென்றதேனோ"

நயினாதீவு

### அமரர் வேலுப்பிள்ளை செல்லையா

(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள உத்தியோகத்தர், "டிக்கோயா")

தூல முகிழ்ப்பு 04-02-1929 | தூல அவிழ்ப்பு 20-02-2000

20-02-2000 அன்று நயினை நாகபூஷணியாள் பதம் சென்றடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (21-03-2000) செவ்வாய்க்கிழமை காலை 07-00 மணிக்கு நயினாதீவு தீர்த்தக்கரையில் நடைபெற்று முற்பகல் 11-00 மணிக்கு, அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் சபிண்டீகரண நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

பண்பால், பாசந்நால் உயர்ந்துநின்று, அன்பால் அனைவரையும் வழிநடத்தி, ஆளாக்கி வளர்த்த எமது குடும்பத் தலைவர் 20-02-2000 அன்று எதிர்பாராததவிதமாக ஆறாத்துயரில் எம்மை விட்டுப் பிரிந்த செய்தி அறிந்து நேரிலும் கடிதம், தந்தி, தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும் இறுதிக கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் மலர் வளையம், மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்தோருக்கும் சடங்கு, அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளில் கலந்துகொண்டு ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மன ஆறுதல் தந்த உற்றார், உறவினர், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

நயினாதீவு —5.

(74554)

### இரு நாடுகளும் கேட்டால் அன்றி

# காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடாது!

## கிளின்ரன் தெரிவிப்பு



புதுடில்லி, மார்ச் 21

இந்தியாவும் பாகிஸ்தானும் கோரிக்கை விடுக்காமல் இரு நாடுகளுக்கும் இடையிலான காஷ்மீர் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடாது என்று அமெரிக்க அதிபர்பில் கிளின்ரன் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டு இந்தியா வந்துள்ள அவர் 'டைம்ஸ் ஒவ் இந்தியா' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இதனைக் கூறினார்

இந்தியா வலுவான, பாதுகாப்பான, ஒருமைப்பாடான நாடாகத் திகழவேண்டும். அப்போதுதான் செல்வச் செழிப்பு மிகுந்த பாதுகாப்பான உலகத்தின் ஒரு ஜனநாயக சக்தியாக இந்தியா விளங்க முடியும். உலகில் வேகமாக வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. புதிய உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவின் உயர் தொழில்நுட்பம் நன்றாகப் பளிச்சிடுகின்றது.

இந்தியாவுடன் சிறந்த நட்புறவை வளர்க்கவும் அமெரிக்காவும் இந்தியாவும் வலிமை மிகுந்த சக்தியாக இணைவதற்கும் இதுவே தகுந்த தருணம்.

பாகிஸ்தானும் இந்தியாவும் கேட்டுக்கொள்ளாமல் அமெரிக்கா ஒருபோதும் மத்தியஸ்தத்தில் ஈடுபடாது. ஜம்மு—காஷ்மீரில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை மதித்துப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பித்து இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தைத் தணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

விரிவான அணு ஆயுதத் தடை ஒப்பந்தத்தில் பாகிஸ்தானும் இந்தியாவும் கையெழுத்திடவேண்டும்.

இவ்வாறு கிளின்ரன் மேலும் கூறினார். (ஐ-6)

# ஒரே சீனக் கொள்கையைக் கைவிட்டால் பேச்சுக்குத் தயார்!

## தாய்வான் புதிய அதிபர் அறிவிப்பு

தாய்பே, மார்ச் 21

தாய்வான் சீனாவின் ஒரு மாகாணம் என்னும் ஒரே சீனக் கொள்கையை வலியுறுத்தாமல் தாய்வானுக்கு சமஅந்தஸ்து தர சீனா முன்வந்தால் அதனுடன் பேசத் தாய்வான் தயார்.

புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சென் சூய்பியாங் இவ்வாறு கூறி உள்ளார். அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் சீனாவைப் பேச்சுக்களுக்கு வருமாறு அழைப்பு விடுத்துப் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக அரங்கில்

தேர்தல் பிரசாரத்தின் போது இவர் தாய்வானின் சுதந்திரத்தை ஆதரித்து பிரசாரம் நடத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சீனாபேச்சுக்களுக்கு இணங்கினால் தாய்வான்—சீனா ஆகியவற்றுக்கு இடையிலான எல்லாஉறவுகளையும் குறித்து பேசுவதற்குத் தான் தயார் என்றும் அவர் கூறினார்.

அவரது இந்தக் கூற்றுக்கள் தேர்தல் பிரசாரத்தின் போது கூறிய வாக்குறுதிகளில் இருந்து அவர் இறங்கி வந்துள்ளதையே காட்டுகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அதே சமயம் —

சீனா தாக்கக் கூடும் என்ற அச்சத்தில் தாய்வான் படைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

(ஐ-6)

# வயக்கரா மாத்திரையால் உயிரிழப்புகள் அதிகரிப்பு!

## ஆய்வு மூலம் தெரியவந்தது

நியூயோர்க், மார்ச் 21

அமெரிக்க நிறுவனம் ஒன்றினால் கடந்த ஆண்டு ஆண்மைக் குறைவை நிவர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட 'வயக்கரா' மருந்துகளைப் பயன்படுத்துவோருக்கு இதயநோய்கள், வயிற்றுக் கோளாறுகள் ஏற்படும் என்றும்—

இதனைப் பாவித்த பலர் உயிரிழந்துள்ளனர் என்றும்—

அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

வயக்கரா பயன்படுத்துபவர்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆய்வில் இருந்து கடந்த ஒரு வருடகாலத்துக்குள் மட்டும் வயக்கரா மாத்திரைகளைப் பயன்படுத்திய 522 பேர் அமெரிக்காவில் உயிரிழந்துள்ளனர் என்று தெரிய வந்துள்ளது இவர்கள் அனைவரும் சட்டரீதியாக மருத்துவ ஆலோசனையுடன் இதனைப் பயன்படுத்தியவர்களாவர்.

மேலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் இந்த மாத்திரைகளைப் பயன்படுத்துகின்றனர். எனினும் அது குறித்து வெளியே சொல்வதில்லை. அந்த வகையில் கணக்கிட்டால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்றும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் வயக்கரா மாத்திரை விற்பனைக்கு அனுமதி அளிக்கப்படாத போதும் அவை சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-6-9)

# கிளின்ரனின் விஜயத்தை எதிர்த்து இடதுசாரிக் கட்சிகள் ஊர்வலம்

புதுடில்லி, மார்ச் 21

கிளின்ரனின் இந்திய விஜயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இடதுசாரிக் கட்சிகள் நாடுமுழுவதும் ஊர்வலங்களை நடத்தி உள்ளன.

ஆந்திரப்பிரதேசம், மேற்கு வங்கம், டில்லி, உத்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் பெரும் எண்ணிக்கையானோர் இந்தக் கண்டன ஊர்வலங்களில் கலந்து கொண்டனர்.

ஊர்வலக்காரர்கள் கிளின்ரனின் கொடும்பாவிகளையும் எரித்துள்ளனர். ''கிளின்ரனே திரும்பிச்செல்'' ''இந்தியா விற்பனைக்கு அல்ல'' என்று ஊர்வலக்காரர்கள் கோஷங்களையும் எழுப்பினர்.

அதேசமயம் — இந்திய நாடாளுமன்றத்தில் கிளின்ரன் நாளை ஆற்ற உள்ள உரையைப் புறக்கணிக்கப் போவதாகவும் இந்திய இடதுசாரிக் கட்சிகள் அறிவித்துள்ளன.

இடதுசாரிக் கட்சிகளின் இந்தப் போக்கு பொறுப்பற்றதனமானது; அதனை அவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது. (இ-6)

### இந்தியாவில் கிளின்ரனின்

# உத்தியோக பூர்வமான விஜயம் இன்றைய தினமே ஆரம்பமாகும்

புதுடில்லி, மார்ச் 21

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் அரசு முறை இந்தியப் பயணம் இன்றே உத்தியோக பூர்வமாக ஆரம்பமாக உள்ளது.

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் புதுடில்லி வந்தடைந்த கிளின்ரன் நேற்று ஒரு நாள் விஜயமாக பங்களாதேஷ் சென்றார். நேற்றுக்காலை அங்கு சென்ற அவர் மீண்டும் நேற்று மாலையே இந்தியா திரும்பினார்,

அவரது உத்தியோகபூர்வ இந்திய விஜயம் இன்று ஆரம்பமாகின்றது. குடியரசுத் தலைவர் மாளிகையில் இன்று கிளின்ரனுக்கு சம்பிரதாய பூர்வமான பாரம்பரிய வரவேற்பளிக்கப்படும் அதன்பின்னர். அவர்இந்திய ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் காங்கிரஸ்கட்சித் தலைவர் திருமதி சோனியா காந்தி ஆகியோர் உட்பட பல முக்கிய இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்.

உலகளாவிய பயங்கரவாதம் அணு ஆயுதத் தடை ஒப்பந்தம், இருதரப்பு பொருளாதார ஒப்பந்தம் ஆகியன குறித்து கிளின்ரன் இந்தியத் தலைவர்களுடன் பேச்சுநடத்துவார். பொருளாதாரம் மற்றும் கலாசாரம் ஆகியன குறித்த பல ஒப்பந்தங்களும் இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய நாடாளுமன்றின் இரு அவைகளும் இணைந்த கூட்டத்தொடரில் நாளை புதன்கிழமை கிளின்ரன் உரையாற்றுவார். அதன் பின்னர் அவர் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்துக்கும் உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹாலைப் பார்வையிடுவதற்கும் செல்வார்.

### இந்தியன் விமானக்கடத்தலின் போது

# கொலை செய்யப்பட்ட ரூபினின் உறவினர்களையும் சந்திப்பார்?

புதுடில்லி, மார்ச் 21

கடந்த ஆண்டு இறுதியில் கடத்தப்பட்ட 'இந்தியன் எயர் லைன்ஸ்' விமானத்தில் வைத்து கடத்தல்காரர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட ரூபின் கத்தியாவின் குடும்பத்தினரை அதிபர் கிளின்ரன் இன்று சந்திக்கக் கூடும் என்றுபுதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

இந்தியாவில் தீவிரவாதக் குழுக்கள் மேற்கொண்டு வரும் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கண்டிக்கும் விதத்தில் கிளின்ரன் ரூபின் கத்தியாலின் குடும்பத்தினரைச் சந்திப்பார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த டிசெம்பர் மாதம் காத்மண்டுவில் இருந்து புறப்பட்ட இந்திய விமானம் கடத்தப்பட்ட சமயம் அதில் பயணம் செய்த ரூபின் கத்தியால் கடத்தல்காரர்களால் குத்திக் கொல்லப்பட்டார். இந்திய விமான நிலையம் ஒன்றில் விமானத்துக்கு எரிபொருள் நிரப்ப அதிகாரிகள் மறுத்ததை அடுத்து கடத்தல்காரர்கள் இந்தக் கொலையைச் செய்ததாகக் கூறப்படுகின்றது. (இ-6)

# நேபாளத்தில் மீண்டும் கொய்ராலா பிரதமர்!



பதவி விலகிய பட்டாராய்

நேபாளத்தின் புதிய பிரதமராக கிரிஜா பிரசாத் கொய்ராலா நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார் 76 வயதான கொய்ராலா நான்காவது தடவையாக நாட்டின் பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

பிரதமராக இருந்த கிருஷ்ண பிரசாத் பட்டாராய் தனது பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து கொய்ராலா புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ளார்.

முன்னதாக பட்டாராயின் ஆட்சியில் ஊழல் மற்றும் வன்முறைகள் அதிகரித்து வருவதாகக் குற்றச் சாட்டுக்கள் எழுந்ததைத அடுத்து நேபாளிக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 61 பேர் பட்டாராய் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தனர். இதனை அடுத்து அவர் தனது பதவியை கடந்த வியாழக்கிழமை இராஜினாமாச் செய்தார்.

பட்டாராய் இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து கூடிய நேபாளி காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் கொய்ராலா தலைவராக சனிக்கிழமையன்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று நடைபெற்ற சம்பிரதாய பூர்வ நிகழ்வு ஒன்றில் நேபாள மன்னர் பிரேந்திராவுக்கு முன் கொய்ராலாவும் சில அமைச்சர்களும் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டனர். (ஐ-6)

### லொத்தரில் பெரும் தொகைகிடைத்த

# வயோதிபரைத் திருமணம் செய்ய 40 பெண்கள் போட்டி!

கனடாவைச் சேர்ந்த வயோதிபர் ஒருவருக்கு அதிர்ஷ்டலாபச் சீட்டு மூலம் 10 லட்சம் கனேடிய டொலர்கள் பரிசுத்தொகைகிடைத்ததை அடுத்து அவரைத் திருமணம் செய்துகொள்ள 40 பேர் முன்வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் அந்தப் பரிசுத்தொகை முழுவதையும்ஒருதமர் ஸ்தாபனத்துக்கு வழங்கப்போவதாக அவர் அறிவித்துள்ளார்

# செல்ஸியா ஹோலிப் பண்டிகை கொண்டாடினார்

இந்தியாவில் நேற்றுக் கொண்டாடப்பட்ட ஹோலிப் பண்டிகையில் அமெரிக்க அதிபரின் மகள் செல்ஸியாவும் கலந்து கொண்டார்.

ராஜஸ்தான் மாநில ஜோர்த்பூரில் உள்ள அரச குடும்பத்தினருடன் இணைந்து செல்ஸியாவும் ஹோலிப் பண்டிகையை கொண்டாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

# அமைச்சர் திஸநாயக்கவுக்கு எதிராக வழக்குத்தொடர 4 எம். பிக்கள் முயற்சி

கொழும்பு, மார்ச் 21

நாடாளுமன்றத்தையும், நீதிமன்றங்களையும் அரசியல் வாதிகள் மூடிவிடுவர் என்று அமைச்சர் எஸ். பி. திஸநாயக்க வெளியிட்டுள்ள கருத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படவிருக்கின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, ரஜித சேனரத்ன, சேகு இஸ்ஸடீன், பி. சந்திரசேகரன் ஆகியோர் கூட்டாக இந்த மனுவைத் தாக்கல் செய்ய முயற்சி எடுத்துள்ளனர்.

அதேநேரம் — அமைச்சர் திஸநாயக்கவின் கருத்துத் தொடர்பாக விசாரணை மேற்கொள்ள மூவர் கொண்ட குழு ஒன்றை பிரதம நீதியரசர் சரத் டிசில்வா நியமித்துள்ளார். (இ-3)

# போஷாக்குக்குறைந்தமாணவருக்கு பால் வழங்குவதற்கு ஏற்பாடு

## ஆய்வுகளை அடுத்து நடவடிக்கை

ஆனைக்கோட்டை சாவற்கட்டுப்பகுதியில் உள்ள பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் பெரும்பாலான மாணவர்களுக்குப் போஷாக்குக் குறைவாக இருப்பதாக அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதாரப் பகுதி அதிகாரிகள் இந்த ஆய்வை மேற்கொண்டிருந்தனர்.

இதனை அடுத்து மகாத்மா சனசமூக நிலைய பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு வாரத்தில் இரு தினங்கள் பசுப்பால் வழங்குவதற்கு மானிப்பாய் வியோக்கழகம் முன் வந்துள்ளது.

நாளை புதன்கிழமையன்று காலை 9 மணிக்கு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி எஸ். இராஜேந்திரா பால் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்.

இந்த நிகழ்வில் வியோக் கழக ஆலோசகர் லயன் சி. பாலகிருஷ்ணன், மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சி. அருமைத்துரை, சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் நா. பொன்னம்பலம், மகாத்மா சனசமூக நிலைய நிர்வாகிகள் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொள்வர்.

இதற்கான ஒழுங்குகளை ஆனைக்கோட்டை பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், சாவற்கட்டு குடும்பநல உத்தியோகத்தரும் செய்துள்ளனர். (இ-135)

# விவேகானந்தர் விழா

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் விவேகானந்தர் விழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு சைவமன்றத் தலைவர் தலைமையில் கல்லூரியில் இடம் பெறும்.

இந்த விழாவில் பிரதம விருந்தினராகத் திருநெல்வேலி இராம கிருஷ்ணாலய இயக்குநர் திரு. திருமதி இராஜ மகேந்திர சிங்கமும் சிறப்பு விருந்தினராக இந்துசமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சி. விநாசித்தம்பியும் கலந்து கொள்வர்.

நிகழ்வில் சான்றிதழ் வழங்கல், விவாத அரங்கு, நாடகம் என்பனவும் இடம் பெறவுள்ளன. (க)

# தென்னம் குரும்பட்டிகளை தாக்கும் 'மைட்'பீடை நோய் இங்கு பரவுகிறது

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்னம் குரும்பட்டிகளைத் தாக்கும் 'மைட்' என்னும் பீடையின் தாக்கம் காணப்படுகின்றது. கண்ணுக்குப் புலப்படாத இச்சிற்றுண்ணி, குரும்பட்டியின் முகிழுக்குள் வாழ்ந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் முதலில் முக்கோண வடிவில் வெளிறல் ஏற்பட்டு நாளடைவில் கபில நிறமாக மாறி, பின்பு காய்ந்த கீறல்களையுடைய தழும்புகள் காணப்படும்.

மேற்படி பீடை சம்பந்தமாக 03-12-1999 'உதயன்' பத்திரிகை மூலமாக எம்மால் பிரசுரம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் எமக்குக் கிடைத்த முறைப்பாடுகள் பரிசீலிக்கப்பட்டு சில தென்னை மரங்களில் இருந்து பெறப்பட்ட குரும்பட்டிகள் யாழ். பல்கலைக்கழகத்தின் உயிரியல் பீடத்தினால் பரிசீலிக்கப்பட்டது. உயிரியல் பீடத் தலைவர் ஜி. முகுந்தன் 'மைட்' என்னும் சிற்றுண்ணியே காணப்படுவதாக உறுதி செய்துள்ளார்.

ஆகவே 'மைட்' என்னும் சிற்றுண்ணியின் தாக்கத்தின் அறிகுறிகள் காணப்படும் தென்னைமரங்களுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கட்டுப்பாட்டு முறைகளில் ஏதாவது ஒன்றைக் கையாளுதல் அவசியமாகும்.

### கெந்தகக் கரைசலை விசிறுதல்

இம் முறையில் நீரில் கரையக்கூடிய கெந்தகத்தூள் (Sulphur w.w p.) ஐந்து கிராமை ஒரு லீட்டர் நீரில் கரைத்து, ஒரு கை விசிறியின் உதவியுடன் தாக்கப்பட்ட மரத்தில் உள்ள தென்னம் குலைகள் யாவும் முழுமையாக நனையும்படி தெளித்தல் வேண்டும். ஒரு லீட்டர் மேற்படி கரைசல் நான்கு (4) மரங்களுக்குப் போதுமானது. ஒருமாத இடைவெளியின் பின் மீண்டும் ஒருமுறை இக் கரைசலைத் தெளிப்பதால் பீடை முழுமையாகக் கட்டுப்படுத்தப்படுவதுடன் மற்றைய மரங்களுக்கும்பரவாமல் தடுக்கலாம்.

கெந்தகம் ஓர் இரசாயனப் பொருள். ஆகவே தெளிக்கும் பொழுது கிணறு, வீடு, குழந்தைகள் விளையாடும் இடம் போன்ற சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாமல் மிகவும் அவதானமாகத்தெளித்தல் வேண்டும். எனினும் மற்றைய கிருமிநாசினிகளை விடப் பாதுகாப்பானது.

### வேப்பெண்ணெய், உள்ளிச் சாற்றுக் கரைசல்

இது ஓர் இரசாயனப் பொருள் அல்லாத மிகவும் பாதுகாப்பான சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாத முறையாகும்.

தேவையான பொருள்கள்

உள்ளி – 20கிராம்

வேப்பெண்ணெய்– 20 மில்லி லீற்றர்

சலவைச்சவர்க்காரம் – 05 கிராம்

நீர் – 01லீற்றர்

20 கிராம் உள்ளியை நன்றாக அரைத்து 100 மில்லி லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியினால் சாற்றை வடித்து எடுக்கவும்.

5 கிராம் சலவைச் சவர்க்காரத்தை 100 மில்லிலீற்றர் நகச்சூட்டு நீரில் கரைத்து வடித்து எடுக்கவும். சவர்க்காரக் கரைசலினுள் 20 மில்லி லீற்றர் வேப்பெண்ணெயை ஊற்றி நன்றாக குலுக்கவும்.

பின்பு மேற்படி கரைசல்களை 800 மில்லிலீற்றர் நீரில் கலந்து நன்றாக குலுக்கி விசிற வேண்டிய கலவையை தயார் செய்துகொள்ள முடியும். இக்கலவையை ஒரு கைவிசிறியின் உதவியுடன் தாக்கப்பட்ட மரத்தில் உள்ள எல்லாக் குலைகளும் நன்கு நனையும்படி தெளித்தல் வேண்டும், ஒரு லீற்றர் கரைசல் நான்கு மரங்களுக்குப் போதுமானது. கரைசலைத் தயார் செய்த அன்றைய தினமே பாவித்தல் அவசியம்.

மொனோகுரோட்டோபஸ் (Monocrotophus)

இது ஒரு மிகவும் அபாயகரமான கிருமிநாசனியாகும். ஆகவே வீட்டித் தோட்டச் சொந்தக்காரர்கள் நேரடியாக தாங்கள் இம்முறையை மேற்கொள்ளுதல் சிபார்சு செய்யப்படவில்லை. ஆனால் பெருந்தோட்டக்காரர்களும் ஏனையவர்களும் தாங்கள் விரும்பும் பட்சத்தில், தங்கள் பகுதிக்குப் பொறுப்பான தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஆலோசனையுடன் மேற்பார்வையுடன் மட்டும் இம்முறையைக் கையாளலாம். கூடியவரை இம்முறையைக் கையாளுதல் தவிர்க்கப்படவேண்டும். ஏனெனில் இதன் நச்சுத் தன்மை தேங்காய்களிலும் இளநீரிலும் சுமார் 2 மாதம் வரை காணப்படும்.

மேலதிக விவரங்களுக்குத் தங்கள் பகுதி பின்வரும் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரை நாடவும்.

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்களுக்கு:

தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், உதவி அரசாங்க அதிபர் பணிமனை, பளை.

யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதி மக்களுக்கு:

தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம் — நல்லூர், யாழ்ப்பாணம்.

கிருமிநாசனிகள் அபாயகரமானவை. ஆகவே அவதானமாகக் கையாளுதல் வேண்டும். தேவைகளுக்கு அதிமாகப்பாவித்தால் இயற்கைச் சமனிலை குழப்பப்பட்டு பலவிதமான பக்க விளைவுகளும், ஏன், விபரீதங்களும் ஏற்படலாம்.

**சி. சிவச்சந்திரன்**
உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தெங்குபயிர்ச்செய்கைச்சபை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

# வாசகர் திருமுகம்

## ஏன் இந்த மௌனமும் எதற்காக இந்த வேறுபாடும்?

முதன்மை ஆசிரியர் நியமனங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் போட்டிப்பரீட்சையின் அடிப்படையிலேயே வழங்கப்படும் என்று கூறி ஒரு போட்டிப்பரீட்சையையும் அரசு நடத்தியது. அப்போட்டிப்பரீட்சைக்கு அப்போது முதன்மை ஆசிரியர்களாக இருந்தவர்களும் ஏனைய ஆசிரியர்களும் தோற்றினர். அப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்குத் திருகோணமலையில் நேர்முகப்பரீட்சை என்று கடிதமும் வந்தது. அப்போது போக்குவரத்து வசதியீனமாக இருந்தமையால், நேர்முகப்பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துமாறு கேட்டிருந்தோம். அதற்கிணங்க நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. ஆனால் இன்றுவரை யாழ். மாவட்டத்திலிருந்து நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் எவருக்காவது நியமனக் கடிதம் வழங்கப்படவில்லை. அப்படியாயின் ஏன் போட்டிப்பரீட்சையை நடத்தினார்கள்? பணம் சம்பாதிப்பதற்காகவா? யாழ். மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கு நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இன்னுமொரு கதை அடிபடுகின்றது. யாழ். மாவட்டத்தில் தற்போது முதன்மை ஆசிரியர்களாக இருக்கும் ஒரு சிலருக்கு நேர்முகப்பரீட்சைக்காகக் கடிதம் வரவில்லையாம். ஆனால் அவர்களோ மாகாண கல்வி அமைச்சிலுள்ள பெரியவர்களுக்கு மிகவும் வேண்டப்பட்டவர்களாம். மற்றவர்களுக்கு நியமனக்கடிதத்தைக் கொடுக்கும்போது தங்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு எப்படி நியமனக் கடிதத்தை வழங்காமல் இருப்பது என்பதற்காக யாழ். மாவட்டத்திற்குத் தெரிவானோர்களின் பெயர் விவரங்கொண்ட படிவத்தை திருகோணமலையிலேயே திருகுதாளம் செய்துவிட்டார்களாம். மாகாண கல்விப்பணிப்பாளர் இதற்கான விளக்கத்தை பத்திரிகை மூலம் தருவாரா?

யாழ். மாவட்டம் 5 வலயங்களாகப் பிரிக்கப்பட்டபின் 5 வலயங்களும் தனித்தனி முதன்மை ஆசிரியர்களை நியமித்துள்ளன. தற்போது நடக்கும் நியமனத்துக்கு பரீட்சைத் திணைக்களத்தால் எதுவித போட்டிப்பரீட்சையும் நடத்தப்படவில்லை. அப்படியாயின் ஏன் முன்னர் போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டது? இது ஒரு பம்மாத்து வேலையா?

வடக்கு—கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் முதன்மை ஆசிரியர்களுக்குமாதாந்தம் 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படுகிறது. ஆனால் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் 500 ரூபாவே வழங்கப்பட்டுவருகிறது. இது பற்றி யாழ். வந்த மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரிடம் கேட்டபோது, "இகே காலுக்கையும், கையுக்கையும் முதன்மை ஆசிரியர்கள் கனத்து விட்டனர். அதுதான் 500 ரூபா வழங்குகின்றோம்" என்றார். ஆனால் அதன் பின்பும் யாழ். மாவட்டத்தில் புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. தென்மராட்சி வலய முதன்மை ஆசிரியர்களுக்கு 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று அண்மையில் உதயனில் செய்தி வெளிவந்திருந்தது. ஆனால் ஏனைய வலயங்களுக்கு அக்கடிதம் வந்து சேரவில்லையா? அல்லது வந்த கடிதம் மாயமாக மறைந்து விட்டதா?

இன்னுமொரு விடயம் என்னவெனில் முதன்மை ஆசிரியர்களின் சம்பளம் வலய பணிமனையில் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் திடீரென்று அவர்களின் சம்பளத்தை பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பட்டியலில் போட்டார்கள். ஆனால் யாழ். மாவட்டத்திலுள்ள நான்கு வலயங்களிலேயே இச்செயற்பாடு நடைபெறுகின்றது. ஒரு வலயத்தில் இன்றுவரை தொடர்ந்து முதன்மை ஆசிரியர்களின் சம்பளம் வலயச் சம்பளப்பட்டியலிலேயே வழங்கப்படுகின்றது. அந்த வலயப் பணிப்பாளருக்கு வந்த துணிவு ஏன் மற்றவர்களுக்கு வரவில்லை? இந்தச் சிறிய மாவட்டத்திலேயே இந்தச் சிறிய விடயத்தில் ஒற்றுமை இல்லை என்றால் எப்படி எம் இனத்தினுள் ஒற்றுமை வரும்?

**க. வரதன்**
வடமராட்சி.

## ரெலிக்கொம் கவனிக்குமா?

தற்போது யாழ்ப்பாணத்தில் சுமார் 2,500 க்கு மேற்பட்ட தொலைத் தொடர்புகள் உள்ளன. அத்துடன் மேலும் தொலைத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் தற்பொழுது உள்ள பெரும்குறை என்னவென்றால் தொலைபேசி இலக்கக் கோவைப்புத்தகம் இல்லாமையே. இதன் காரணமாக தொலைத் தொடர்பு சேவையை நடத்தும் நாங்கள், யாழ். மாவட்டத்தில் உள்ள தொலைத் தொடர்பு இலக்கங்களோடு தொடர்பு கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகிறோம். ஓர் இலக்கத்தைப் பெறுவதற்கு சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் 101 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சரியான இலக்கத்தைப் பெறமுடியும். ஆனால் பிழையான இலக்கங்களே சில சமயங்களில் கொடுக்கப்படுகின்றன. இதனை சிறிலங்கா ரெலிக்கொம் கவனிக்குமா?

**தொலைத் தொடர்பு சேவையாளர் சங்கம்,**
யாழ். மாவட்டம்.

உதயன்

## அடைத்து வைக்கவா?

''பாதுகாப்புக்காக'' என்று கூறி அரசாங்கம் — படையினர் — செய்யும் சகல நடவடிக்கைகளும் தமிழர்களைத் தொல்லைப்படுத்துவனவாகவும் அவர்களைச் சந்தேகப் பிராணிகளாகப் பார்ப்பனவாகவுமே உள்ளன.

இந்த வரிசையில் மட்டக்களப்பில் அரசு புதிதாக அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ள ''பாஸ்'' நடைமுறை, அந்த மாவட்ட மக்களைத் திறந்த சிறைச்சாலைக்குள் அடைக்கும் ஓர் ஏற்பாடாக அமையவுள்ளது. அரசின் முடிவை எதிர்த்து ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த இருபதாயிரம் மக்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் நடைமுறைக்கு வந்த போது, அது மக்களின் நடமாடும் சுதந்திரத்தைப் பறிப்பதாகவும், மக்களைத் திறந்த சிறைச்சாலைக்குள்வாழும் நிலையை உருவாக்கும் எனவும் மக்கள் தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அரசு யாழ்ப்பாண மக்களின் கருத்துக்குச் செவி மடுக்கவில்லை; தான் நினைத்ததை நிறைவேற்றி முடித்திருக்கிறது. அதேபோல மட்டக்களப்பிலும் தான் உத்தேசித்துள்ள ''பாஸ்'' நடைமுறையைக் கொண்டு வரும் என எதிர்பார்க்கலாம்.

எனினும் தற்போதைய போர்ச் சூழ்நிலையில் பல்வேறு அழுத்தங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் ஆளாகியுள்ள மட்டக்களப்பு மாவட்ட மக்கள், அரசின் நடவடிக்கையால் மேலும் பல கஷ்டங்களை, தொல்லைகளை அனுபவிக்க நேரிடும்.

''பாஸ்'' பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தில் கைரேகை பதியப்பட வேண்டும் என்ற உத்தேச விதி, தமிழ் மக்கள் அனைவரையும் சந்தேகத்துக்கு உரியவர்களாக அரசு பார்க்கிறது என்பதனை உறுதி செய்வதாக உள்ளது.

அண்மைக்காலத்தில் கொழும்பில் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்களை நடத்தியோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து சென்றவர்களே என்ற பொலீஸாரின், படையினரின் ''கண்டுபிடிப்புகளை'' அடிப்படையாக வைத்தே அரசு ''பாஸ்'' வழங்கும் முடிவை மேற்கொண்டிருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து கொழும்புசெல்வதற்கு பயணிகள் — பொதுமக்கள் — எட்டுக்கும் மேற்பட்ட சோதனை நிலையங்களில் முழு அளவிலான கடும் சோதனைக்கு ஆளாகி வருகிறார்கள். மன்னம்பிட்டி சோதனை நிலையத்தில் ''அரிகண்டமான'' சோதனைகளுக்கும் உட்பட்ட பின்னரே செல்ல முடிகிறது.

இத்தனை சோதனைகளின் போதும் குண்டுதாரிகளைக் கண்டுபிடிக்க முடியாத, அரச தரப்பின் பலவீனத்தை மறைப்பதற்காகவே, மாற்று வழியாகவே ''பாஸ்'' முறை கொண்டு வரப்படுகின்றது என்பதே உண்மை.

அரசு தனது பலவீனத்தை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளை ஆராயாமல், எடுத்த எடுப்பிலேயே ''பாஸ்'' முறையை அமுல் செய்ய முடிவு செய்திருப்பதனை தமது தவறுக்காக மக்களைப் பழிவாங்கும் செயலாக ஏன் கருதக் கூடாது?

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை தமிழ்ப்பிரதேசங்களை, அதன் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களை, மொத்தமாகவே திறந்த சிறைச்சாலைகளாக்கி, தமிழ் மக்களை அடைத்து வைக்கும் ஜனநாயகத்துக்கு ஒவ்வாத அத்தியாயத்தின் ஓர் அங்கமே.

# பகுத்தறிவை நல்கும் பெண் கல்வியே சமூக அமைப்பில் மாற்றத்தைத் தரும்

இலங்கையின் ஜனாதிபதி ஒரு பெண். இப்புத்தாயிரம் ஆண்டுக்குரிய வரவு—செலவுத் திட்டத்தைத் தானே நேரில் சமர்ப்பித்துள்ளார். நிதி அமைச்சின் செயற்பாட்டை மிகப் பொறுப்பாக உணர்ந்து நாட்டின் தலைவி என்ற ரீதியில் 2000 ஆம் ஆண்டுக்குரிய நாட்டின் திட்டம் அனைத்துக்கும் உரிய வரவு—செலவினைத் தானே திட்டமிட்டு உரையாற்றியுள்ளார்.

நாட்டின் தலைவராகப் பெண் வரமுடியும்; நாட்டின் வரவு—செலவினைக் கணக்கிட்டு, வழிகாட்ட முடியுமானால் குடும்பத்தின் தலைவி குடும்பச் செலவினை ஏன் கணக்கிட்டுச் செயலாற்ற முடியாது?

சாதாரண ஒரு குடும்பத்தில் காலை நான்கு மணியிலிருந்து இரவு பத்து மணி வரை வேலை செய்பவள் பெண். சில இரவுகள் சிவராத்திரியாக இருப்பதுவும் உண்டு. ஆனால் அவள் ஒய்வு ஒழிச்சலின்றிச் செய்திடும் வேலைக்குச் சம்பளம் இல்லை. பிள்ளைகளைப் பராமரிக்க, வீட்டுச் சமையலுக்குச் சம்பளமா கிடைக்கிறது? இது ஓர் உபரி வருமானமாகும். சாதாரண குடும்பத்தின் ஆணைவிட அவ்வீட்டுப் பெண்ணின் உழைப்பு அதிகம். ஆயினும் அது பணமாக வருவதில்லை. ஆண் ஒருவன் ஆறு மணி நேர வேலைக்கு150ரூபாபெற்றால் 18 மணித்தியாலம் வேலை செய்திடும் பெண் 450 ரூபா பெறவேண்டும். 4 ரூபா 50 சதம் தானும் கிடைப்பதில்லையே, ஏன்? குடும்பம் என்பதாலே என்றால் அவளும் குடும்பத்தின் பங்காளி என்ற நிலை இல்லை. குடும்பத்தில் பெண் ஒரு பங்காளி என்ற உணர்வு வேண்டும். ஆணுக்குப் பெண் சளைத்தவள் அல்லள் என்ற சமத்துவம் இருக்கவேண்டும்.

இப்பொழுது தென்மராட்சியில் நெல்அறுவடை நடைபெறுகிறது. ஆணைவிடப் பெண்ணுக்குக் குறைந்த சம்பளம். எதற்காக? பொதுவாக ஒரே விதமான ஒரே நேர வேலைக்குச் சம்பளம் பெண்ணுக்குக் குறைவு. இந்த வேலையைவிட வீட்டில் சமையல் போன்ற வேறும் பல வேலைகளை அவ்வேலைக்கு முன்னும் பின்னும் பெண்ணே செய்கின்றாள். அவை பெண்களின் வேலை; பெண்களே செய்ய வேண்டும் என்பதால் சமூக ரீதியாக இப்படி நடைபெறுகின்றது. அரசாங்க வேலையாயின் இந்த வேறுபாடுகள் இல்லை. உத்தியோகத்திற்கு ஆள் சேர்ப்பில் இருந்தது என்றாலும் அவை மிக வேகமாக மாறி வருகின்றது.

குடும்பப் பொறுப்பு என்றால் அதில் பங்காளராக கணவனும் மனைவியும் அமைதல் வேண்டும். கல்வி கற்ற குடும்பங்களில் பெண்களும் படித்துள்ளனர். ஆணாதிக்கம் இருப்பினும் சக வாழ்வு இருக்கிறது எனலாம். ஆனால், கிராமத்தில் கல்வி பெறாதவர்களின் வீடுகளில் நிலைமை மிகவும் மோசமாக இன்றும் இருக்கின்றது.

வன்னிக்குச் சென்று திரும்பிய ஒரு கிராமத்துக் குடும்பம் அது. கணவன் அங்கு ஒரு திருமணம் செய்துகொண்டார். மனைவியும், ஆறு பிள்ளைகளும் வீடு திரும்பியுள்ளனர். மனைவிக்கு எழுதவாசிக்கத் தெரியாது. வயது 32. பிள்ளைகள் பள்ளிக் கூடம் சென்று திரும்பினர். முதல் மூன்று பிள்ளைகளுக்கும் எழுத்துக்கள் தெரியும். சரி வர வாசிக்கமாட்டார்கள். நாலு வரி எழுத்தில் 16 பிழைகள். எழுத்தும் உறுப்பெழுத்தில்லை. கடைசி மூன்று பிள்ளைகளும் அநாதைகள் இல்லம் ஒன்றில் சேர்க்கப்பட்டார்கள். ஓரிடம் என்றில்லாது திரிந்ததால் அங்கும் அவர்கள் குழப்படி; நிலைத்துவாழமுடியவில்லை. அந்தப் பெண் வாழ்வுக்காக வயதான ஒருவருடன் சேர்ந்ததால் மீண்டும் ஒருகுழந்தை. வாழ்வு சோபிதமில்லை. அலைச்சல் உலைச்சல். இவற்றுக்கு என்ன காரணம்? சமய நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் இவற்றைச் சிந்திக்க வேண்டும்.

சமூக அமைப்பில் மாற்றம் அமைய வேண்டும். பெண் கல்வி பெரிதும் கொடுக்கப்பட வேண்டும். மேலே குறிப்பிட்ட குடும்பத்தின் சின்னாபின்ன நிலைக்குக் கல்வியின்மை பிரதான காரணமாகும்.

பெண்கல்வி மூடநம்பிக்கைகள் பலவற்றை இல்லாது ஒழித்திடும். விதவைக் கோலத்தைநீக்கி மறுவாழ்வு கொடுக்கும். தொழில் வாய்ப்புக்களை நம்பிக்கையோடு ஏற்படுத்தும். குடும்பத் திட்டமிடலை நன்கு கவனிக்கும். பெண்ணிற் பெருந்தக்க யாவுள — என்ற நிலை பிறக்கும்.

பெண்கல்வி சமூகத்தின் — நாட்டின் — எழுச்சிக்கு, வளர்ச்சிக்கு இன்றிடமையாததாகும். பெண்பட்டதாரியானால் பெண்கல்வி கிடைத்தது என்பதல்ல. பாடமாக்கிப் பரீட்சை எழுதினால் பட்டதாரியாகலாம். கல்வி பகுத்தறிவை வழங்கிடவேண்டும். எப்பொருள் யார் யார் வாய்க்கேட் பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவைத் தருவதாகக் கல்வி அமைய வேண்டும். ★

திருமதி செ. யோகரத்தினம்
(தலைவர். யாழ். மகளிர் ஆய்வு அபிவிருத்தி நிறுவனம்)

## யாழ்.ஆஸ்பத்திரியில் 2ஆவதுமாடி புனரமைப்புப் பணிகள் பூர்த்தி

### வெள்ளியன்று திறந்துவைக்கப்படும்

யாழ். போதனா வைத்தியசாலையில் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ள ஐந்து மாடிக்கட்டடத்தின் இரண்டாவது மாடியை ஐ. நா. அபிவிருத்தித்திட்டம் புனரமைத்துள்ளது.

இந்த மாடிக் கட்டடம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

ஆண்களுக்கான மெடிக்கல் சிகிச்சைப்பிரிவு இந்தக் கட்டடத்தில் இயக்கவிருக்கின்றது.

இந்த மாடிக் கட்டடத்தில் கீழ்தளம் புனரமைக்கப்பட்டு அங்கு சிறுபிள்ளை நோயாளர்களுக்கான வார்ட்டுக்களும் பெண்களுக்கான வைத்திய சிகிச்சைப்பிரிவு விடுதியும் இயங்க ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-3-15-139)

## துவக்காலச் சிந்தனை

(பதினான்காம் நாள்)

(உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும்(மத்23:11)

அன்று இயேசு கிறிஸ்துவால் கூறப்பட்ட வார்த்தை வாய்ச்சொல்லுடன் நின்றுவிடவில்லை. செயல் வடிவிலும் வாழ்ந்து காட்டினார். இயேசுதமக்குக் கீழ்பணிசெய்வதற்காகத் தன்னால் பயிற்றப்பட்ட சீடர்களுடைய பாதங்களையே கழுவுகிறார். இதன் அர்த்தம் எவ்வளவு பெரியது என்று எல்லோராலும் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இன்று நடப்பவை என்ன? அதிகாரத்தில் இருப்பவர்கள் தனக்குக் கீழ்ப் பணியும் பணியாளரை மனிதனாக மதிக்கின்றார்களா? அவர்களுடைய அடிப்படைப் பிரச்சினைகளை உணர்கிறார்களா? ஒவ்வொருவரும் உங்கள் உள்ளத்தைத் திறந்து சிந்தியுங்கள். இல்லாவிட்டால் இனியாவது இறைவனின் வார்த்தையை வாழ்வாக மாற்றிட உறுதி பூணுவோமாக.

சி. சி. கொலிந்திரன்
(நல்லூர்)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கிறிஸ்துவுக்காக இளைஞர் என்ற சபையினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட வேதபாடப் பரீட்சையில் பங்குகொண்டு சித்தி அடைந்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

யாழ்ப்பாணம் கச்சேரியடி வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் அன்றையதினம் பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெறும் இந்த வைபவத்துக்குப் பரீட்சையில் பங்குகொண்ட மாணவர்கள், பெற்றோர், ஜெபபங்காளர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கிறிஸ்தவ கீதங்கள், இன்னிசை நிகழ்ச்சி என்பனவும் நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

### உதய வாக்கு

மணம் செய்த பின்தான் குருக்ஷேத்திரம்; வாழ்க்கை முழுவதும் ஒரு யுத்தகளம்; மனத் தூய்மைக்குப் பல சோதனைகள் நேரிடும்.

- ராஜாஜி

## பிள்ளைகளை தரக்கோரி தாய் நீதிமன்றில் மனு

கணவனை விட்டுப் பிரிந்து வாழும் பெண் ஒருவர் தனது பிள்ளைகளைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கோரி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல்செய்துள்ளார்.

பண்டத்தரிப்பைச் சேர்ந்தவரான இந்தப் பெண் கணவரையும் பிள்ளைகளையும் பிரிந்து பல வருடங்களாகிவிட்டன.

கணவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டதை அடுத்து நீதிமன்றம் மூன்று பிள்ளைகளில் இருவரை திருநெல்வேலி சைவச்சிறார் இல்லத்திலும் ஒருவரை துர்க்கையம்மன்சைவச்சிறார்இல்லத்திலும்விடும்படிபணித்திருந்தது.

இதைத்தொடர்ந்தே அவர் தனது பிள்ளைகளைத் தன்னிடம் ஒப்படைக்கக்கோரி மனுவைத் தாக்கல்செய்தார்.

மல்லாகம் மாவட்ட பதில் நீதிபதி ஏ. ரி. அரியநாயகம் பிள்ளைகளைச் சென்று பார்வையிட இவருக்கு அனுமதி வழங்கினார். (இ-3-86)

### நாளை

பங்குனி 9
புதன்கிழமை
திதி: துதியை
முற்பகல் 10.10 வரை.
நட்சத்திரம்: சித்திரை
மாலை 6.47 வரை.
சுபநேரம்: 4.47- 6.17
ராகுகாலம்: 12.17-1.47
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

### வைத்தீஸ்வரனை வணங்கிடு!

இராகம்: பிலஹரி    தாளம்: ஆதி

பல்லவி

வண்ணைவைத் தீஸ்வரனை வணங்கிடு வாய்மனமே
மாட்சியைப் பெறஅவனுக் கிணங்கிடுவாய்நிதமே
(வண்ணை)

அநுபல்லவி

மண்ணிற் பிறந்தபயன் அடைந்திட வும்மறுமை
மகத்துவம் பெற்றுமிக உயர்ந்திடவும் பெரிய
(வண்ணை)

சரணங்கள்

தண்ணளி மிக்கதையல் நாயகி யாள்அவளைத்
தன்னிடப் பாகங்கொண்டு வந்திடு வான்கொடுமை
பண்ணும் வினைப்பயன்கள் பாறியே வீழ்ந்திடவே
பரமனின் பாதமலர் பற்றிடுவாய் இதமே
(வண்ணை)

கண்ணியாய்க் கார்நறிய கொன்றை அணிந்திடுவான்
கங்கைபிறை முடிமேலே கொண்டுபொ லிந்திடுவான்
பண்ணிசைப் பாடலுக்குப் பாகாய் உருகிடுவான்
பத்தியிலே இளகிப் பித்தனும் ஆயிடுவான்.
(வண்ணை)

- சொக்கன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### நாடகம்

வானொலியில் 'அடிபதி வடி' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணம் - சிறுகதைத் தொகுப்பு, 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடக நூல், 3. நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50.
(74647)

### தேவை

எமது அலுவலகத்தில் எழுத்தாளராகப் பணிபுரிய பெண்பிள்ளை தேவை. O/L இல் தமிழ், ஆங்கிலம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். தகுதியுடையோர், நேரில் வரவும், துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (74653)

### புறோயிலர் குஞ்சுகள்

பிறிமா புரோயிலர் குஞ்சுகள் 23 ஆம் திகதி விநியோகிக்கப்படும். ஓடர்களை முன் கூட்டியே பதிவு செய்யவும். பிறிமா பேட்டுக் குஞ்சுகளுக்கு முன் பதிவு எடுக்கப்படும். தொடர்பு; S. கண்ணா இல. 31, மான்ஸ் பாடசாலைவீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் வளவு).
(74555)

### புரொயிலர் குஞ்சுகள்

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு பிறிமா இன புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். விலை ரூபா அறுபது மட்டும். (30- 03- 2000) வியாழன் பிறிமா HI-Line சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விநியோகிக்கப் படும். தொடர்பு: வை. சிவகுமார், நாவலர் வீதி, (அரவிந் வீடியோ அருகில்), அத்தியடி, யாழ்ப்பாணம்.
(74646)


### விற்பனைக்கு

பாவனைக்குகந்த பலகைகள் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு நாட வேண்டிய முகவரி: D.S. ஜெனாட், இல. 222, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(74637)

---

காரைநகர் மணற்காடு

## அருள்மிகு கும்பநாயகி அம்பாள் மஹோற்சவ விழா



## கொடியேற்றி அருள் கூட்டு!

கொடுமைகள் தீர்க்கக் கொடியேற்று
குவலயம் காக்கக் கொடியேற்று
அடிமைகள் போக்கக் கொடியேற்று
அவலங்கள் விலக்கக் கொடியேற்று
விடிவுகள் பூக்கக் கொடியேற்று
வேதனை தீர்க்கக் கொடியேற்று
தீர்வினைக் காட்ட கொடியேற்று
திருமணற் காட்டில் கொடி யேற்று!

- மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன் -

இன்று கொடியேற்றம் காணும் அருள்மிகு அன்னை கும்பநாயகியின் அருள் உலக மக்கள் அனைவருக்கும் கிடைக்க வேண்டி இன்றைய விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
41, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(74663)

---

''கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசிர்வதிப்பார்'' (சங். 29:11)

## அறுவடைத் தரிசனம்-2000

இம் மாதம் 22 ஆம் திகதி தொடக்கம் 25 ஆம் திகதி வரையும் (கனடா) ரொறண்டோ அறுவடை மிஷனறி சபைப் போதகர் **வின்சன் சகாயநாதன்** அவர்கள் தலைமையில்

## அறுவடைத் தரிசனம்-2000

நிகழ்வுகள் கீழ்க் குறிப்பிட்ட பிரகாரம் நடைபெறும்.

▶ **22-03-2000** புதன்கிழமை காலை 9.00 மணி — மாலை 4.00 மணி வரையும் ஊழியர்கள் கருத்தரங்கு (அனைத்து சபைகளும்)

இடம்: **கலையரங்கு உரும்பிராய்ச் சந்தி.**

▶ **23-03-2000** வியாழக்கிழமை காலை 9.00 மணி—மாலை 4.00 மணி வரையும் விசுவாசிகள் கருத்தரங்கு (அனைத்து சபைகளும்)

இடம்: **கலையரங்கு உரும்பிராய்ச் சந்தி.**

▶ **24-03-2000** வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி—மாலை 6.00 மணி வரையும் சுவிசேஷக்கூட்டம்.

இடம்: **சிறுவர் கலையரங்கு மைதானம்-துணவி (வட்டுக்கோட்டை).**

▶ **25-03-2000** சனிக்கிழமை மாலை 3.00 மணி — மாலை 6.00 மணி வரையும் சுவிசேஷக் கூட்டம்

இடம்: **கலையரங்கு மருதனார்மடம் சந்தி.**

சபைப்போதகர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் யாவரையும் இக்கருத்தரங்கிலும் சுவிசேஷக் கூட்டங்களிலும் பங்குபற்றி தேவ ஆசீர்வாதம் பெறும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

எல்லாவற்றுக்கும் மேலாக தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது!
நன்றி.

**கர்த்தர் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!**

(74660)

---

# 4 ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் விவரம் சேகரிப்பு

வலி.தென்மேற்கு, மார்ச் 21

கடந்த நான்கு ஆண்டுகளில் அரச திணைக்களங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் செய்து முடிக்கப்பட்ட வேலைகள், புனரமைப்பு ஆகியவை பற்றிய விவரங்களை உடன் அனுப்பு வைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுள்ளார்.

வாகனவிவரம், தளபாடம் உபகரணம், கட்டடங்கள் மற்றும் வீதிகளின் விவரங்கள் ஆகியவற்றை அறிக்கையிட்டுத் தருமாறு யாழ். அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இதற்கான விவரத்திரட்டு அடங்கிய பட்டியல்கள் அனைத்தும் பிரதேச செயலகங்கள் மற்றும் பிரதேச சபை அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

(இ-3-185)

---

## முக்கிய அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் கொண்டு திரிந்து வியாபாரம் செய்யும் விற்பனையாளர்கள் அனைவரும் வியாபார உரிமம் பெறுதல் வேண்டும். மீறுவோர் மீது பிரதேச சபைக் கட்டளைச் சட்டம் 147 - 152 வரையுள்ள பிரமாணங்களுக்கமைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துக் கொள்கின்றேன்.

தலைவர்
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.
சுழிபுரம்.

(சி/11474)

---

# மரண அறிவித்தல்கள்

## செபமாலைமுத்து செபமாலைராஜா

போயிட்டி இளவாலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரும் காலஞ்சென்ற அன்னியாஸ் செல்லமுத்துவின் மூத்த மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை அன்னமுத்துவின் அன்பு மருமகளும் செபமாலைராஜாவின் (J. S. Rajah) அன்பு மனைவியும், அமிர்தநாதர், காலஞ்சென்ற சிங்கராசா, அந்தோனிப்பிள்ளை, றோஸ்ரத்தினம் ஆகியோரின் சகோதரியுமாகிய செபமாலைமுத்து 16 - 03 - 2000 அன்று கொழும்பில் காலமாகி விட்டார்.

அன்னார் செல்வம் (நோர்வே), செல்வராஜினி (பிரான்ஸ்), செல்வரஞ்சிதம் (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற ஜெயராஜா, காலஞ்சென்ற யோகராஜா, தவராஜா (ஆஸ்திரேலியா), விஜயராஜா (ஆஸ்திரேலியா), செல்வரோகினி (கொழும்பு), ரட்ணராஜா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பயஸ் (பாரெய்ன்), துரைராஜா (ஆஸ்திரேலியா) எலிசபெத்ராணி (நோர்வே), யூலியானாஜ்ராஜேஸ் (புதுக்குடியிருப்பு), பவானி(ஆஸ்திரேலியா), எட்வின் இராஜகுமார் (ஜேர்மனி), பியாற்றிஸ் (ஆஸ்திரேலியா), புனிதராஜி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராஜினி (பிரான்ஸ்), றொபேட், றொட்னி, கெங்கா, வதனா, றொபின், றஜனி (நோர்வே), கௌரி, கௌசி, றமணன், றஜித் (ஆஸ்திரேலியா), யோகா, ஜெபா, ரஜிம், பிறேம் (புதுக்குடியிருப்பு), ஜலீன் (கொழும்பு), கொட்பிறி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியும் சோத்திரின், வேஜினி(பிரான்ஸ்), கட்சன் (நோர்வே) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22 - 03 - 2000) புதன்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை ஜயவர்த்தன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு கனத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
செல்வம் (மகன் - நோர்வே)
றோகினி (மகள் - கொழும்பு)

No. 132, Lower St., Andrew's Place.
Colombo — 15.
T. P. No 529258 (74657)

## திருமதி கதிரவேலு சின்னத்தங்கம்

பொற்கலந்தம்பை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு சின்னத் தங்கம் அவர்கள் கடந்த 19-03-2000 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார்புகையிரதத் தலைமைப்பாதுகாவலரான காலஞ்சென்ற அ. கதிரவேலுவின் அன்பு மனைவியும் திருமதி கருணாகரன் ஜெயராணி (புத்தளம்), க. ரவீந்திரன் (இயூரோலைற், கொழும்பு), க. யோகேந்திரன் (பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபை, புத்தளம்) க. கஜேந்திரன் (ஆதார வைத்தியசாலை, புதுக்குடியிருப்பு), க. தவராணி (புத்தளம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், க. கருணாகரன் (புத்தளம்), அஜாதேவி ரவீந்திரன் (மருத்தாளர், மார்பு வைத்தியசாலை, வெலிசறை), கோணேஸ்வரி யோகேந்திரன் (ஆசிரியை, சாஹிரா கல்லூரி, புத்தளம்), புனிதா கஜேந்திரன் (ஆதார வைத்தியசாலை புதுக்குடியிருப்பு), ஆகியோரின் மாமியாரும் அகிலா, குமரன், நகுலா, அகிலன் குலேஷ், கிரிஷாணி, காயத்திரி ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் புத்தளம் தில்லையடி இந்து மயானத்தில் நேற்று (20-03-2000) திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. குலேந்திரன்

புத்தளம்.
தொ. பே. இல- 032-66418, (74662)

# காலாகாலமாகதமிழ்கிராமமாகஇருந்த கராச்சிக்குடா சிங்களக்கிராமமாகிறது

## காணிகளைப் பங்கு போட்டு எல்லைகளை அமைக்கின்றனர்

கொழும்பு, மார்ச் 21
காலாகாலமாகத் தமிழ்க் கிராமமாக இருந்து வந்த திருமலை மாவட்டத்தின் கராச்சிக் குடாவை சிங்களக் கிராமமாக மாற்றும் முயற்சிகள் தீவிரமாக நடைபெறுகின்றன என்று கூறப்படுகிறது.

கைவிடப்பட்ட நிலையில் உள்ள இந்தக் கிராமத்துக்கு அண்மையில் அரச ஊழியர் ஒருவர் சென்றபோதே இது தெரியவந்தது என்று கூறப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இந்த விடயம் திருகோணமலைப் பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

கராச்சிக்குடா கிராமத்தில் சட்டவிரோத செயல்களை நிறுத்தும்படி பிரதேச செயலர் சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சிங்கள மக்கள் பலர் கராச்சிக்குடாவில் உள்ள காணிகளைத் தங்களுக்குள் பங்கு போட்டுக் கொண்டு எல்லைகள் போட்டு வீடு அமைத்துக் கொண்டிருந்ததைத் தாம் கண்டதாக அந்த அரச ஊழியர் தெரிவித்துள்ளார்.

கராச்சிக்குடா ஒரு தமிழ்க் கிராமம். திருகோணமலை கிண்ணியா வீதியில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த சுமார் ஐம்பது தமிழ்க் குடும்பங்கள் 1985 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தினால் கூண்டோடு இடம் பெயர்ந்தன. 1989 இல் மீளக் குடியமர்ந்த 39 தமிழ்க் குடும்பங்களும் 1990 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தால் மீள இடம்பெயர்ந்தனர்.

இடம்பெயர்ந்த இந்தக் கிராம மக்கள் திருகோணமலையில் பல்வேறு பகுதிகளிலும் அகதிகளாக நிவாரணங்களுடன் வாழ்க்கை கழித்து வருகின்றார்கள்.

ஆளும் கட்சியைச் சேர்ந்த உள்ளூர் பிரமுகர் ஒருவரே கராச்சிக் குடாவை சிங்களக் கிராமமாக மாற்றும் முயற்சியில் இறங்கி உள்ளார் என்று கூறப்படுகிறது. (இ-8-7)

## நாடக ஆற்றுகை

யாழ்ப்பாணம், மார்ச் 21
சுன்னாகம் அவைக்காற்றுகைக்குழு புத்தாயிரமாண்டுக்கான நாடகபாடத்துக்கான "ஒதெல்லோ" ஆற்றுகை ஒன்றை அடுத்த மாதம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10—30 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடத்தவுள்ளது.

மேற்படி ஆற்றுகை நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்கள் பட்டப்படிப்புகள் கல்லூரி மற்றும் டி. எம். ஐ. கல்வி நிலையம், அவைக்காற்றுகைக் குழுவின் மருதனார் மடத்தில் உள்ள அலுவலகம் ஆகியவற்றில் தமது பெயர் விபரங்களைப் பதிவு செய்து கொள்ளலாம் எனவும்—

ஆற்றுகையில் கலந்துகொள்பவர்களுக்கு ஆற்றுகை தொடர்பான கைநூல் ஒன்று வழங்கப்படும் எனவும்—தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சில வர்த்தகர்களினால் சட்டம் துஷ்பிரயோகம்

வலிகாமம் தெற்கு, மார்ச் 21
மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் சனி, ஞாயிறு தினங்களில் சில நிறுவனங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டபோதிலும் அந்த நிறுவனங்கள் அதனை துஷ்பிரயோகம் செய்கின்றன. அவ்வாறான நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்"

யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்க சமாசத்தின் முன்னாள் உபதலைவரும் சுன்னாகம் வர்த்தக சங்க முன்னாள் தலைவருமான சி. எஸ். எஸ். முத்துக்குமாரு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சனிக்கிழமைகளில் அரைநேரமும் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுநேரமும் கடைகளை மூடவேண்டும் என்பது வர்த்தக சங்கத்தினதும் தொழில் திணைக்களத்தினதும் கட்டளை ஆகும்.

இருப்பினும், மக்களுக்கு சேவை புரியும் நோக்குடனும் அத்தியாவசிய தேவைகளுக்கென சனி, ஞாயிறு தினங்களில் கடைகளைத் திறந்து வைக்க அனுமதிஅளிக்கப்பட்ட சில தொலைத் தொடர்பு நிலையங்கள், உணவுச் சாலைகள், தேநீர்க்கடைகள், மருந்துச்சாலைகள் பழக்கடைகள் என்பன தம்முடன் சம்பந்தப்படாத பொருள்களை வைத்து விற்பனை செய்து வருவதாகத் தெரிய வருகின்றது.

அதே சமயம் பல வர்த்தக நிறுவனங்கள் வர்த்தக சங்கத்தின் கோரிக்கைக்கு செவிமடுக்காது சனி, ஞாயிறு தினங்களிலும் கடைகளைத் திறந்து வியாபாரம் செய்து வருகின்றன.

இவ்வாறு செயற்படும் நிறுவனங்களைக் கண்டுபிடித்து அவற்றுக்கு எதிராக நடவடிக்கைளை எடுக்க வேண்டும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-152)

## வேலணையிலிருந்து வந்தவரை ஏமாற்றி பொருள் அபகரிப்பு

நல்லூர் மார்ச் 21
வேலணை கிழக்கில் இருந்து நல்லூரில் உள்ள தனது உறவினர் வீட்டுக்கு வந்த ஒருவரை ஏமாற்றி அழைத்துச் சென்ற இரு இளைஞர்கள் அவரிடம் இருந்த மணிக்கூடு, சிறிது நகைப் பணம் ஆகியவற்றைப் பறித்துச் சென்றனர். இச்சம்பவம் கடந்த வாரம் நல்லூரில் இடம்பெற்றது.

மேற்படி நபரை செட்டித் தெரு பருத்தித்துறை வீதிக்குச் சமீபமாக வைத்து இரு இளைஞர்கள் மறித்ததாகவும்—விசாரணை என்று கூறி சந்தசுவாமி கோவிலின் அருகே நிறுத்தப்பட்டுள்ள இடத்திற்குக் கூட்டிச் சென்றதாகவும்—

அவரது சேட்பொக்கற்றில் இருந்த அடையாள அட்டையை பரிசீலிக்கவென வாங்கிக்கொண்டு பின்னர் பேர்சை எடுத்துத் திறந்து அதற்குள் இருந்த ஒரு தொகைப் பணத்தை எடுத்ததாகவும்—

மணிக்கூட்டில் வயர்லெஸ் பொருத்தப்பட்டுள்ளதா எனப் பரிசோதிக்க வேண்டும் எனக் கூறி மணிக்கூட்டையும் கழற்றிக்கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

சம்பந்தப்பட்ட நபர் கூச்சலிடவே இரு இளைஞர்களும் தாம் அபகரித்த பொருள்களுடன் தமது [illegible] சைக்கிளில் ஏறி மறைந்து விட்டனர். (இ-101)

## ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் டாக்டர், தாதியர் பற்றாக்குறை

நெடுந்தீவு மார்ச் 21
ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் போதிய ஆளணி இல்லாமையால் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சை அளிப்பதிலும் நோயாளர்களைப் பராமரிப்பதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன.

நான்கு வைத்திய அதிகாரிகள் கடமையில் இருக்கவேண்டிய இடத்தில் தற்போது ஒருவரே கடமையில் உள்ளதாகவும் ஏழு தாதிகள் பணியாற்ற வேண்டிய இடத்தில் ஒருவரே உள்ளதாகவும் கூறப்படுகிறது.

அனலைதீவு, எழுவைதீவு, காரைநகர் உட்பட ஏனைய தீவுப் பகுதிகளில் இருந்தும் பெருமளவு எண்ணிக்கையானோர் இங்கு சிகிச்சைக்கு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-111)

## ஈ.பி.டி.பியைச் சேர்ந்த பிரதேச சபைத் தலைவர்கள் இந்தியத் தூதுவரை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 21
இந்தியப் பிரதித் தூதுவர் இரி ராதி ஈ.பி.டி.பியின் பொறுப்பில் உள்ள பத்துப் பிரதேச சபையின் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

[illegible] யின் கச்சேரியடியில் உள்ள விடுதியில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு மருத்துவம், கல்வி மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தமான நூல்களை இந்தியாவில் இருந்து பெற்றுக் கொடுப்பது குறித்தும்—

யாழ்ப்பாணத்தில் இந்திய [illegible] அமைப்பது குறித்தும் [illegible] யாழ்ப்பாணத்திலோ [illegible] திட்டத்தை அறிமுகம் செய்வது குறித்தும்—

மற்றும் முன்பள்ளி நிலையங்களில் மாணவர்களுக்கு போசாக்குணவு வழங்குவது குறித்தும் பிரதேச சபைத் தலைவர்கள் பிரதித் தூதுவரிடம் எடுத்துக் கூறினார்.

இந்திய அரசின் உதவியுடன் மேலே கூறப்பட்ட திட்டங்களை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தத் தன்னால் இயன்ற நடவடிக்கை எடுப்பதாக பிரதித் தூதுவர் அப்போது உறுதியளித்தார்.

குடாநாட்டு வியாபாரிகள் மற்றும் வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் போக்குவரத்தில் பொதுமக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகள் பற்றியும் பிரதித்தூதுவரிடம் எடுத்துக் கூறப்பட்டது. (இ-7-5)

## வவுனியா நலன்புரி நிலையங்கள் ஒரு கோடி ரூபா செலவில் புனரமைப்பு

வவுனியா, மார்ச் 21
வவுனியா மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களின் புனரமைப்புக்கென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திணைக்களம் ஒரு கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட பெரும்பாலான நலன்புரி நிலையங்களின் கூரைகள் மற்றும் நீர் விநியோக முறைகள், வீதிகள் என்பன இந்த நிதி உதவித் திட்டத்தின் மூலம் புனரமைக்கப்படும் எனவும்—தெரிவிக்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து வவுனியா அரச அதிபர் கடந்த சில வருடங்களாக பல்வேறு தரப்பினரிடமும் தெரிவித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-164)

## 30 வீதமான மருந்துவகையே வன்னிக்கு அனுப்பப்படுகின்றன

கொழும்பு, மார்ச் 21
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களில் 30 வீதம் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றன என்று அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதிக்குத் தேவையென அப்பகுதி சுகாதாரப் பகுதியினரால் கோரப்படும் நூறு வீதமான மருந்து வகைகளில் 70 வீதம் குறைக்கப்பட்டு 30 வீதம் மட்டுமே அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

வன்னிக்கு மருந்துப் பொருள்களை அனுப்புவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அனுமதி கோரப்படும் பொழுதே இக் குறைப்பு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் இறுதிமுதல் இத்தகைய நிலை காணப்படுவதால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

வைத்தியசாலைகளில் மருந்தின்மையால் நோயாளர்கள் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். (ஐ-க)

## நீதிவானுக்கு பிரியா விடை

யாழ்ப்பாணம், மார்ச் 21
பருத்தித்துறை நீதிமன்ற நீதிவானாகக் கடமையாற்றி யாழ். நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்ட நீதிவான் ஆர். ரி. விக்னராஜாவைக் கௌரவித்து பிரியா விடை வைபவமும், பதிய போசன விருந்தும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற அலுவலர்களினால நடத்தப்பட்டன.

பதில் நீதிவான் ஏ. கே. நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் நீதிவான் ஆர். ரி. விக்னராஜாவின் பணிகளைப் பாராட்டி மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ். செல்வரட்ணம், நீதிவான் நீதிமன்ற பதிவாளர் வி. மார்க்கண்டு, மொழி பெயர்ப்பாளர் எஸ். கிருபைராசா ஆகியோர் உரையாற்றினர். (இ-5)

## புலிகளிடம் கைதிகளாக உள்ள ஏனைய சிப்பாய்களும் போராட்டத்தில் குதிப்பர்

எமது விடுதலை தொடர்பாக அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் முன்னர் உண்ணாவிரதமிருந்து பின் அதனைக் கைவிட்ட 11 பேருடன் இணைந்து நாமும் உண்ணாவிரதத்தில் குதிக்கவுள்ளோம்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தடுப்புக்காவலிலுள்ள 22 படையினர் அறிவித்துள்ளனர் என காணாமல் போன படைவீரர்களின் சங்கத் தலைவர் ஜி. பி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

புலிகள் வசமுள்ள படையினர் சிப்பாய் ஒருவர் தனது பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் மேற்படி உண்ணாவிரதப் போராட்டம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் எனவும் — ஜி.பி. நாணயக்கார தெரிவித்துள்ளார். (இ 7)

## விபரம் திரட்டு

சண்டிலிப்பாய், மார்ச் 21
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் வசித்துவரும் விதவைப் பெண்களினது விபரங்களை இப்பிரிவு சமூக சேவை உத்தியோகத்தர் அ. அமிர்தலிங்கம் கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவியுடன் திரட்டி வருகின்றார்.

திருகோணமலையில் உள்ள வடக்கு — கிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களப் பணிப்பாளரினால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு இணங்க இந்த விதவைப் பெண்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-135)

# வருட நடுப்பகுதிக்குள் தீர்வுத் திட்டம் நாடாளுமன்றில் நிறைவேறிவிடும்

## அமைச்சர் மகிந்த நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் புதிய அரசமைப்பு யோசனைகள் வருட நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்படும் என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எதிர்பார்க்கின்றது.

அமைச்சர் மகிந்த விஜயசேகர மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

உக்வெல்ல பிரதேச செயலகக் கட்டடத்தைத் திறந்து வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதியின் தலைமையிலான அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவது எதிர்க்கட்சி என்ற வகையில் ஐ.தே.க.வின் பொறுப்பாகும்.

நாட்டின் நன்மை கருதி ஐ.தே.க. இந்தப் பொறுப்பில் இருந்து பின்வாங்க முடியாது. அரசின் தீர்வு யோசனைக்கு ஆதரவு வழங்கியே தீரவேண்டும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எமது முன்னணியே வெற்றிபெறும். அதன் மூலம் மக்கள் எமது தீர்வுக்கு ஆணை தருவார்கள் — என்றார். (இ-க-3)

# குமுதினிப் படகு இன்னமும் திருத்தப்படவில்லை

நெடுந்தீவு, மார்ச் 21

ஊர்காவற்றுறை நெடுந்தீவுச் சேவையில் உள்ள அரச படகு குமுதினி பழுதடைந்து இன்றுடன் 25 நாள்களாகியும் இன்னமும் இதற்குத் தேவையான உதிரிப்பாகங்கள் வந்து சேரவில்லை.

இன்னும் எத்தனை நாள்களுக்கு இந்த நிலைமை நீடிக்கும் எனப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

தீவுப் பகுதியில் சேவையில் உள்ள ஒரே ஓர் அரச படகு குமுதினி மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. (இ-111)

# குடியிருப்பாளருக்கு காணி உறுதி

வவுனியா, மார்ச் 21

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தற்காலிகமாகக் குடியமர்த்தப்பட்டுள்ள இடம்பெயர்ந்தவர்களுக்குக் காணி உறுதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு - கிழக்கு மாகாணக் காணி ஆணையாளர் எஸ். அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வவுனியாவில் உள்ள காத்தான் கோட்டம், ஊர்மிளா கோட்டம், அம்பிகைபாலன் கோட்டம் ஆகிய தற்காலிக குடியிருப்புக்களுக்கு விஜயம் செய்த இவர் அங்குள்ள மக்களிடம் இந்த உறுதிமொழியை வழங்கினார். (இ-5-164)


## தொழிற்சங்கம் அமைப்பதற்கான பொதுக் கூட்டம்

தேசிய கைத்தொழில் அதிகார சபையினூடாக இலங்கை மின்சார சபையில் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்பு பயிற்சி பெற்ற அனைத்துப் பயிலுநர்களையும் 22—03—2000 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு பின்புறமாக அமைந்துள்ள சிவன் சனசமூக நிலையத்துக்கு தவறாது சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

- பயிலுநர்கள்.

மின்சார சபை,
சுன்னாகம். (74651)


## கண்ணீர் நினைவுகள்...



தோற்றம்: 26 — 11 — 1934

மறைவு: 21 — 03 — 1998

### அமரர் சுந்தரஐயர் பாலசுப்பிரமணியன்

(முன்னாள் ஆசிரியர்)

உருவாக்கி உயரவழிகாட்டி
விரைவாகப் போனீர்களே ...... அப்பா!
உங்கள் வழிகாட்டலை முன்வைத்துப்
பின் தொடர்கின்றோம் ......

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவன்கோயில் வீதி,
சாவகச்சேரி. (சி/L1473)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மார்ச் 21

கொழும்புத்துறை மேற்கு புங்கன்குளம் வீதி— வில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று காலை 10-00 மணிக்கு ஆரம்பமாகி பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

கிரியைகள் அறங்காவலர்— பூசகர் பொ. தில்லைநாதன் தலைமையில் நடைபெறும்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளி காலை 10.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசைகளும் நேர்த்திக்காவடிகள், பால்செம்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஜ-30)

★ ★ ★

சுழிபுரம், மார்ச் 21

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய முதலாவது பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை முதல் நாளை புதன் காலை வரை நடைபெறும். (க-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

அரியாலை—வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் நவக்கிரக கிருஷ்ணன் கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறும்.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் நேற்று ஆரம்பமாகின. நாளை புதன்கிழமை அடியார்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (க)

★ ★ ★

காரைநகர், மார்ச் 21

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் காலை 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (க-73)

★ ★ ★

சுழிபுரம், மார்ச் 21

சுழிபுரம் கண்ணகி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நடைபெறும். (க-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், மார்ச் 21

நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும்.

நாளை தீர்த்தோற்சவமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை பூங்காவனத்திருவிழாவும் எதிர்வரும் 24 ஆம் திகதி வைரவர் சாந்தியும் 25 ஆம் திகதி அன்னதானமும் நடைபெற்று உற்சவம் முடிவடையும்.

ஆலயத்தின் மகோற்சவம் கடந்த 8 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (க)

# வீட்டுத்தோட்டம், பழமரச்செய்கை; 5,000 பயனாளிகள் ஈடுபடுவர்

வலி. வடக்கு, மார்ச் 21

பட்டினிக்கெதிரான அமைப்பினால் இந்த ஆண்டு 5 ஆயிரம் பயனாளிகள் வீட்டுத்தோட்டம், பழமரச் செய்கை ஆகியவற்றில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் வலிகாமம் பகுதியில் 2 ஆயிரம் குடும்பங்களும் வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் தலா ஆயிரத்து 500 குடும்பங்கள் என்ற அடிப்படையில் 3 ஆயிரம் குடும்பங்களும் பயனடையவுள்ளனர்.

இந்தப் பயனைப் பெறுவதற்குப் பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாகக் கிராம அலுவலர் மட்டத்தில் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை வீட்டுத் தோட்டச் செய்கை, பழமரச் செய்கை ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவர்களை இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளும்படி பட்டினிக்கெதிரான அமைப்பினால் கிராம அலுவலர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு வேண்டிய பொருள்கள் யாவும் பட்டினிக்கெதிரான அமைப்பினால் இலவசமாக வழங்கப்படவுள்ளன. (இ-86)

# மெய்வல்லுநர் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மு.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் கலந்து கொள்வார். (க-28)

★ ★ ★

தொல்புரம் அ.மி.த.க. பாடசாலை வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை தொல்புரம் மத்திய பொக்கணை விளையாட்டு மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. செல்லையா பிரதம விருந்தினராகவும் ஓய்வு பெற்ற அதிபர் திருமதி ச. இராசையா சிறப்பு விருந்தினராகவும் சோதி சுந்தரலிங்கம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர். (க-29)

★ ★ ★

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய அதிபர் இ. சிவபாதசேகரம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறும். (க-30)

★ ★ ★

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி கமலாதேவி காராளசிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக எஸ். ஆர். எஸ். தேவதாசன் தம்பதிகள் கலந்து கொள்வர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சுப்பிரமணியம் தனலட்சுமி

பிறப்பு: 28 - 03 - 1929 | இறப்பு: 20 - 02 - 2000

சோர்வின்றி, ஓய்வின்றி எங்களைப்
பாசமாக வளர்த்தாயே அம்மா!
மின்னாமல் முழங்காமல் எங்களை
எல்லாம் கண் கலங்கி, கதிகலங்கி
நிற்கும் உங்கள் பாசமிகு பிள்ளைகள்
எல்லோரும் கூடி நிற்கும் வேளை எங்களை
விட்டு எங்கு சென்றாயோ தாயே?
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
எமது ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 21 - 03 - 2000 எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதியபோசனத்திலும் குடும்ப சகிதம் வந்து பங்கு கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

26, செம்மணி வீதி,
அரியாலை. [74656]

## நதியாவின் பாட்டுக்குப் பாட்டு
## மணிக்குரல் விளம்பர சேவையின்
## 27ஆவது ஆண்டு நிறைவு விழா

எதிர்வரும் 09.04.2000 ஞாயிறு அன்று யாழ். மத்திய கல்லூரி கலை அரங்கில் நடைபெறும் கலைப் போட்டியும் மாபெரும் இன்னிசை விருந்தும் இல. 2, கஸ்தூரியார் வீதி, T.P.3479

**நதியா ஜுவல்லர்ஸ்** ஆதரவில்

**பாட்டுக்குப்பாட்டு**

பாட்டுக்குப்பாட்டு, தேனிசைமழை ஆகிய போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் கீழ் உள்ள முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 25.03.2000**

வி. எஸ். சற்குணன் – மணி வீடியோ,
52, மாட்டின் றோட், யாழ்ப்பாணம். (C/11475)


## ஆசார்யாபிஷேக அழைப்பு
## (குருபட்டாபிஷேகம்)

அன்புடையீர்!

ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் பங்குனித் திங்கள் ஒன்பதாம்நாள் நாளை (22.03.2000) புதன்கிழமை காலை 6.17மணி முதல் 7.26மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

அச்சுவேலி தீர்த்தாங்குள விநாயகர் அர்ச்சகர்
திரு.க.பாலசுப்பிரமணிய ஐயாவின் சிரேஷ்ட புத்திரன்

**சிரஞ்சீவி பால.சோமசுந்தர ஐயாவிற்கு**

(பிரதம அர்ச்சகர், இடைக்காடு புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்)

மேற்படி ஆலயத்தில் வைத்து சிவாச்சார்யாபிஷேகம் (குருபட்டாபிஷேகம்) நடத்த இறையருள் துணைகொண்டு பெரியோர்கள் நிச்சயித்துள்ளார்கள். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதமாக வருகை தந்து நடைபெறும் கிரியைகளில் பங்குகொண்டு வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆசார்யாபிஷேக பிரதமகுரு, ஆகமக்கிரியாவிபுதர்
**சிவஸ்ரீ சிவ.ஆறுமுகக்குருக்கள்** - கட்டுவன்

சர்வபோதனாசிரியர், ஆகமக்கிரியாதத்வநிதி
**சிவஸ்ரீ அ.நடராசாக்குருக்கள்** - கல்வியங்காடு

ஆகமக்கிரியாஜோதி
**சிவஸ்ரீ ச.மகாலிங்கக்குருக்கள்** - நாயன்மார்கட்டு

சாதகாசிரியர், 'சாதகஞானபானு'
**சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக்குருக்கள்** - இருபாலை

அருளாசியுரை:
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்**
(ஆதீன முதல்வர், நல்லூர்)

இங்ஙனம்

தீர்த்தாங்குளம்
பத்தமேனி
அச்சுவேலி.

திருமதி இ.பாலசுப்ரமணியஐயா
திரு.திருமதி வே.சுந்தசாமிக்குருக்கள்

(74682)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமலிங்கம் இராசம்மா

திருமதி இராமலிங்கம் இராசம்மா காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும் பூமணி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் புவனேஸ்வரி, லோகநாதன் (மல்லாகம் நீதிமன்றம்), கமலேஸ்வரி ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் செல்வநாயகம், இந்திராதேவி, ஸ்ரீஸ்கந்தராசா, கௌரிதேவி, புஸ்பராசா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் சீவரெட்ணம் (நோர்வே) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் சி.ருக்மணி (நோர்வே) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு (பு.நே.) அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.லோகநாதன் (மகன்)

ஸ்ரான்லிக் கல்லூரி ஒழுங்கை,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (74684)

### கணபதிப்பிள்ளை ஜெகநாதன் (நாதன்)

புளியங்கூடலை பிறப்பிடமாகவும் புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்காலிகமாக இல.80 சீனிவாசகம் வீதி, கொட்டடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கணபதிப்பிள்ளை ஜெகநாதன் (நாதன்) நேற்று (20.03.2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புளியங்கூடலைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை (ஓவசியர்), காலஞ்சென்ற மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தளையசிங்கம், திருமதி ஆச்சிக்கண்ணு (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் அமிர்தநாயகியின் (ராணி) அன்புக் கணவரும் வக்சலா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), துஷியந்தன் (யாழ். இந்துக்கல்லூரி மாணவன்), கஷியந்தன் (யாழ். மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மோகன், ஈசன், இந்திரன், சீலன், ஆனந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கோமதி, கிளி, ரஞ்சன், சிவா, சதா, பபா, இந்திரன், தீஸ் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்க்கிரியைகள் இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அமிர்தநாயகி (ராணி) (மனைவி)

80, சீனிவாசகம் வீதி,
கொட்டடி. (74686)

## இந்திய மீனவர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து கடந்த 12ஆம் திகதி கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மூன்று பேர் காங்கேசன்துறை பயங்கரவாதத் தடுப்பு பொலீஸாரால் நேற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த எசக்கி முத்து அழகேசன், யேசுதாஸன் இருதயராஜ், சூசைதாசன், திருவேந்திரம் ஆகிய மூவருமே மன்றில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இலங்கையில் தடைசெய்யப்பட்ட கடற்பிரதேசத்தில் அனுமதி இன்றிப் பிரவேசித்து நடமாடியதால் பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தில் இவர்கள் கைது செய்யப்பட்டு இவர்கள் மீது வழக்கு பதிவுசெய்யப்பட்டதாக பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் மூவரையும் எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் -

இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு இது தொடர்பான தகவலை 'பக்ஸ்' மூலம் அனுப்பிவைக்குமாறும் -

நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-9)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், மார்ச்21

யாழ். மாநகரசபை சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனையினர் மாநகரப் பகுதியில் உள்ள வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணியினை இன்று ஆரம்பிக்கின்றனர். நாளை முதல் வெள்ளிக்கிழமை வரையான மூன்று தினங்களிலும் தடுப்பூசி போடும் நிலையங்களின் விவரம் வருமாறு:-

* புதன் காலை 8.30 மணி முதல் 12.30 மணிவரை - நல்லூர் மூத்த விநாயகர் ச. ச. நிலையம், பிற்பகல் 2 மணிமுதல் 4.30 மணி வரை - வண்ணார்பண்ணை பெருமாள் கோவில் மேற்கு வீதி.

* வியாழன் - காலை 8.30 மணி முதல் 12.30 மணிவரை நீராவியடி ச.ச. நிலையம், பிற்பகல் 2 மணி முதல் 4.30 மணி வரை அரியாலை காந்தி ச. ச. நிலையம்.

* வெள்ளி - காலை 8.30 மணி முதல் 12.30 மணி வரை நல்லூர் கலாசார மண்டபம், பிற்பகல் 2 மணி முதல் 4.30மணிவரை ஆத்திசூடி ச. ச. நிலையம்.

தடுப்பூசி போடும் ஏனைய இடங்கள் குறித்த விவரம் பின்னர் உதயனில் வெளியாகும். (க)

## செயலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

குடாநாட்டில் விற்பனை செய்யப்படும் பாணின் நிறை மற்றும் விலை என்பவற்றில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பதில் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி தி.பத்தினியம்மா தலைமையில் இடம்பெறும் இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் சங்கத்தில் அங்கத்துவம் பெறாத பேக்கரி உரிமையாளர்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9-4)

## தடகள விளையாட்டு போட்டி

வலி.கிழக்கு,மார்ச் 21

கோப்பாய் பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதனை ஒட்டிய மரதன் ஓட்டம் நாளை புதன்கிழமை காலை 7.00 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து ஆரம்பமாகி கோப்பாய் சந்தி, உரும்பிராய் வீதி, கிருஷ்ணன் கோவில் சந்தி, இராசவீதி, இருபாலைச்சந்தி, பருத்தித்துறை வீதி ஊடாக பிரதேச செயலகத்தை வந்தடையவுள்ளது.

பங்குபற்றுபவர்களை காலை 6.30 மணிக்கு முன்பாக செயலகத்திற்கு வருகை தரும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஐ-180)

# மரண அறிவித்தல்கள்

### கந்தையா இராசரத்தினம்

(ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய முன்னாள் அதிபர்)

கல்வயலலைச் சேர்ந்த கந்தையா இராசரத்தினம் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றோசம்மா, அருட்செல்வநாயகி ஆகியோரின் அன்புமிகு கணவரும் காலஞ்சென்ற மதுரவாணி, கலாவாணி, ஜெயானந்தசிவம், சிவநாராயணதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை பி.ப.4மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
இ.ஜெயானந்தசிவம் (மகன்)

கல்வயல்,
சாவகச்சேரி. (C/11477)

### சிற்றம்பலம் யோகேஸ்வரன்

(லண்டன்)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் யோகேஸ்வரன் 18.03.2000 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்தியநிபுணர் சிற்றம்பலம், திருமதி புவனேஸ்வரி சிற்றம்பலம் அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை, திருமதி கமலாவதி காசிப்பிள்ளை அவர்களின் மருமகனும் புஷ்பலதாவின் அன்புக் கணவரும் கலைவாணி, கோபி, லக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதீஸ்வரன், கேதீஸ்வரன், கணேஸ்வரன், நகுலேஸ்வரன், தயாளினி ஆகியோரின் அருமைச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை 82, NORTH FIELD ROAD NEW BARNET HERTS U.K என்ற முகவரியில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ப.தருமலிங்கம் (மாமன்)
262/3, கொழும்புத்துறை வீதி,
அரியாலை - யாழ்ப்பாணம்.

த.சதானந்தன் (மாமன்)
73, சந்தனமாதா கோயில் ஒழுங்கை,

(74673)

### திருமதி பத்மநாதன் சேதுப்பிள்ளை

மட்டுவில் வடக்கு முத்துமாரியம்மன் வீதியைச் சேர்ந்த திருமதி பத்மநாதன் சேதுப்பிள்ளை அவர்கள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் பத்மநாதன் (இளைப்பாறிய நில அளவை உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் சி.கனகசபையின் அன்புச் சகோதரியும் சாந்தநாயகி (சாந்தி), சாந்தருபன் (ருபன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் காலை 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வண்ணாத்திப்பாலம் ஊரி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சாந்தி, ருபன் (பிள்ளைகள்)

முத்துமாரி அம்மன் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (C/11479)

### திருமதி சூசைஜோண் மனுவேல்பிள்ளை மசேலியா

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மனுவேல்பிள்ளை மசேலியா நேற்றுமுன்தினம் (19.03.2000) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைஜோண் மனுவேல்பிள்ளை (றேடியோ மனுவேல்) அவர்களின் அன்பு மனைவியும் மலர், லூட்ஸ், ஜீவா, காலஞ்சென்ற ராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் இராயப்பு, இமானுவேல் (யாழ். நீதிவான் நீதிமன்றம்), காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜீவா (மகள்)

இல.22, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (74680)

### சுந்தரம் கனகரட்ணம்

(நாவற்குழி)

நாவற்குழியைச் சேர்ந்த சுந்தரம் கனகரட்ணம் அவர்கள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் திரு.திருமதி சுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும் இரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும் மதனகல்யாணி, மகேந்திரராஜா, தர்மராஜா, இரவீந்திரன், கணேசமூர்த்தி, ஜீவகாருண்யன், கோசலா, குணசுந்தரி, தயாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நாவற்குழி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நாவற்குழி,
கைதடி. (74681)

### நன்னியார் வேலுப்பிள்ளை (சின்னத்தம்பி)

மாவிட்டபுரம் தாளையடியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.திருமதி நன்னியார் தம்பதிகளின் மகன் நன்னியார் வேலுப்பிள்ளை (சின்னத்தம்பி) அவர்கள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00மணிக்கு பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
மகேஸ்வரன் (மகன்)

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (74683)

# சனியன்று நடக்கும் பேரணியில் 40க்கும் அதிக அமைப்புக்கள் இணையும்

யாழ்ப்பாணம்,மார்ச்21

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமெனக் கோரி எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்நகரில் நடத்தப்படவுள்ள சமாதானப் பேரணியில் யாழ்ப்பாணத்திலுள்ள 40க்கு மேற்பட்ட பொது அமைப்புகள் பங்குபற்றவுள்ளன.

அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலிலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பேரணி கோயில்வீதி ஊடாக கண்டி வீதியை அடைந்து அங்கிருந்து துரையப்பா ஸ்ரேடியத்தை சென்றடையும். அங்கு மதத்தலைவர்களின் ஆசியுரைகளைத் தொடர்ந்து சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் ஜனாதிபதிக்கு முகவரியிட்ட மகஜர் ஒன்று யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

பேரணி கோயில் வீதி வழியாக வரும்போது அகதிகளுக்கான ஐநா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு போன்றவற்றின் அலுவலகங்களில்சமாதானத்தை வலியுறுத்தும் மகஜர்கள் கையளிக்கப்படும்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினால் நடத்தப்படும் இந்தச் சமாதானப் பேரணியில் சமாதானத்தை வலியுறுத்தும் சுலோக அட்டைகளும் எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இந்தப் பேரணிக்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன. பேரணியை நடத்த படையினரும் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

# இடம்பெயர்ந்த மாணவருக்கு பாடசாலை உபகரணங்கள்

## ஈ. பி. டி. பி. வழங்குகிறது

யுத்த சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த குருநகர், தனங்களப்பு மற்றும் செம்பியன்பற்று பகுதிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 8லட்சம் ரூபா செலவில் பாடசாலை உபகரணங்களை வழங்கும் திட்டம் ஒன்றை ஈ.பி.டி.பி ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பான ஆரம்ப வைபவம் ஒன்று நேற்று புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் (ஜெகன்) இதில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கினார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட நிதியில் இருந்து இந்த உபகரணங்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7-139)

## விலை உயர்வை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"இரு வருடங்களுக்கு முன்னர் பெற்றோலின் விலை சர்வதேச சந்தையில் குறைக்கப்பட்டபோது உள்ளூரில் அதன் விலை குறைக்கப்படவில்லை. ஆனால் தற்போது பெற்றோலின் விலை சர்வதேச சந்தையில் அதிகரித்துள்ளபோது உள்ளூரில் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. முன்னர் சர்வதேச விலைக் குறைப்பின்போது சலுகைகளை வழங்காத அரசு அதற்கான நிவாரணமாக ஆயிரம் கோடி ரூபாவை பொது மக்களுக்கு வழங்க வேண்டும்".

- இவ்வாறு அங்கு உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதேவேளை - விலை உயர்வு காரணமாக மக்களுக்கு ஏற்படும் சுமையைக் குறைக்கும் வகையில் நிவாரண நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போவதாகவும் -

இந்தப் போராட்டத்துக்கு செவி மடுத்து அரசு நிவாரணம் தர மறுத்தால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் போராட்டங்கள் நடத்தப்படும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-8)

## யுத்தக்கைதிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிடுவதற்காக கொழும்பில் இருந்து வன்னி சென்ற உறவினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க அரசுக்கு 15 நாள் அவகாசம் வழங்கும் வகையில் - அவர்கள் கடந்த மாதம் 25 ஆம் திகதி உண்ணாவிரதத்தை தற்காலிகமாகக் கைவிட்டிருந்ததும்-

தெரிந்ததவையே.

இக் கைதிகளில் நால்வரை விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வேடபிரபாகரன் மனிதாபிமான அடிப்படையில் விடுவித்திருந்தார்.

எஞ்சிய 11 கைதிகளும் தமது விடுதலை தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுத்திருந்த போதும் அரசு அதற்குச் செவி சாய்க்காததை அடுத்தே மீண்டும் போராட்டத்தில் குதிக்க அவர்கள் ஆயத்தமாகி வருவதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

பெரும்பாலும் ஓரிரு தினங்களில் அவர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

யுத்தக் கைதிகளின் விடுதலை தொடர்பாக வன்னி சென்று பேச்சு நடத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் ஜனாதிபதியிடம் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இவர்களில் ஒருவரான பிரதி அமைச்சர் டிலான் பெரேரா வன்னி செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளார். அவருக்கு இதுவரை அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களான நிசா கரவியத்த, நந்தசேன ஹேரத் ஆகியோரும் இவ்விவகாரம் குறித்து வன்னி சென்று பேச்சு நடத்த விருப்பம் தெரிவித்துள்ளனர். எனினும் அரசுத் தரப்பில் இதுவரை ஆக்கபூர்வமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(மற்றொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்) (ஐ-7-8)

## அகதிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தஞ்சம் கோருவதற்கு எவருக்கும் அனுமதியுண்டு; ஆனால் பொருளாதார நன்மை கருதி எவரும் ஜேர்மனியில் புகலிடம் கோர முடியாது. இந்த அடிப்படையிலேயே புகலிடம் கோரிய ஐயாயிரத்து 500 ஈழத் தமிழர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புகலிடம் மறுக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் அனைவரும் இந்த ஆண்டுக்குள் திருப்பி அனுப்பப்பட்டுவிடுவர்.

இலங்கை, தமிழ்நாடு ஆகிய பகுதிகளில் இருந்து அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிப்பவர்கள் பலரும் போலி ஆவணங்களையே சமர்ப்பித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தத்தமது நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவதற்கு முன்பாக அவர்கள் தமது விடயம் குறித்து வாதிடுவதற்கு போதிய அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் அளித்த விளக்கங்கள் திருப்திகரமாக இருக்கவில்லை.

புகலிடம் கோரியவர்களை தத்தமது தாயகத்துக்குத் திருப்பி அனுப்பும் தீர்மானம் இலங்கைக்கு மட்டுமல்ல ஏனைய நாடுகளுக்கும் பொருந்தமானது.

இவ்வாறு ஜேர்மன் தூதரகம் விளக்கமளித்துள்ளது. (ஐ-7)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் நள்ளிரவு 12 மணிவரை தேடுதல் நடத்தினர்.

பின்னர் புளொட் அமைப்பின் மாவட்ட அலுவலகத்தினுள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு நுழைந்த படையினர் அந்த அமைப்பைச் சேர்ந்த மூவரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் பொலீஸ் நிலையத்தில் தடுத்துவைத்து கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட இந்த உறுப்பினர்கள் நேற்று மாலை 3 மணியளவில் விடுதலை செய்யப்பட்டனர்.

நள்ளிரவில் படையினர் மேற்கொண்ட தேடுதல் மன்னார் நகர மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியதாக மன்னார்ச் செய்திகள் தெரிவித்தன. (ஐ-7-164)

## எதிர்வரும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான டிக்கெட்டுகள் இன்று விநியோகிக்கப்பட உள்ளன. இன்று நண்பகல் 12 மணிக்கு பின்னர் டிக்கெட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சிவில் நிர்வாக அதிகாரி அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 29ஆம் திகதி வரைக்கான விமான சேவைகளுக்கான டிக்கெட் விநியோகம் பூர்த்தியடைந்துள்ளதாகச் சிவில் நிர்வாக அலுவலகம் ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே. (ஐ)


**ஷண்ணின்**

**காக்கைச் சிறகினிலே**

**ஒறிஜினல் C.D**

பிரதிகள் 2 1/2 மணித்தியாலம் இன்றே பெறலாம்

பிரதி விலை 250/= மட்டுமே

போஸ்ரர் இலவசம்

**ஷண்**

பெரிய கடை, யாழ்ப்பாணம்.

(74685)



INSTITUTE OF INFORMATICS STUDIES

**முக்கிய அறிவித்தல்**

நிறுவன தினத்தில் (25.03.2K) சான்றிதழ் பெறவிருக்கும் 1999/2000 கல்வியாண்டில் பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்கள் அனைவரும் புகைப்படம் எடுப்பதற்கு (22/03/2K) முன்பதாக தலைமை அலுவலகத்தில் தமது பதிவினை அவசியம் மேற்கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இயக்குனர், IIS.

(C/11482)



**எமது புதிய வீடியோ C.D வெளியீடு**

**பார்த்திபனின் காக்கைச் சிறகினிலே**

ஒறிஜினல் வெளியீடுகள்

- சத்தியம்
- சித்திரா - பௌர்ணமி
- மிருதங்க சக்கரவர்த்தி
- உழைத்து வாழ வேண்டும்
- பெற்றெடுத்த பிள்ளை

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம.

(C/11484)



**கணக்கீடு**

NEW SCIENCE COLLEGE

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

A/L 2000

**கம்பனி**

ஆசிரியர்:- திரு சி.தவா

ஆரம்பம்:- 21.03.2000

(74655)


# தென்னிந்திய திருச்சபையும் சமாதானப் பேரணிக்கு ஆதரவு

## கொழும்பிலிருந்து பேராயர் செய்தி

யாழ்ப்பாணம்,மார்ச்21

யுத்தத்தை உடன் நிறுத்தி தமிழ் மக்களுக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்றை வழங்கக் கோரி எதிர்வரும் சனிக்கிழமை யாழ்நகரில் நடத்தப்படவுள்ள சமாதானப் பேரணிக்கு தென்னிந்திய திருச்சபை யாழ்.அத்தியட்சாதீனம் ஆதரவு தெரிவித்துள்ளது.

தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீன பேராயர் அதி.வண கலாநிதி எஸ் ஜெபநேசன் கொழும்பில் இருந்து விடுத்த அறிக்கை ஒன்றில் சனியன்று நடைபெற உள்ள சமாதானப் பேரணியில் தென்னிந்திய திருச்சபைக் குருமார்களையும் தென்னிந்திய திருச்சபை மக்களையும் கலந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சமாதானம் ஏற்பட நாம் எல்லோரும் எம்மாலான பங்களிப்பைச் செய்யவேண்டும்; சோர்ந்து போகக்கூடாது. சமாதானக் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்.

இப்படி பேராயர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பில் தற்பொழுது தங்கியுள்ள பேராயர் அங்கிருந்து விரைவில் வமடு செல்வதால் இந்தப் பேரணியில் கலந்து கொள்ளமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# கல்முனையில் நேற்று உண்ணாவிரதம்

நாட்டின் சகல பிரதேச செயலகங்களுக்கும் வழங்கப்படும் வசதிகள் கல்முனை தமிழ் பிரதேச செயலகத்துக்கும் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி நேற்று அந்தப் பிரதேச செயலகம் முன்பாக ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்பட்டது.

அம்பாறை மாவட்ட தமிழர் மகாசபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் இந்து, பௌத்தமத குருமார்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

கல்முனை தமிழ்ப் பிரிவு உப பிரதேச செயலகத்தை பிரதேச செயலகமாகத் தரம் உயர்த்த வேண்டும். ஏனைய பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படும் வசதிகள், நிதி ஒதுக்கீடுகள் இதற்கும் வழங்கப் படவேண்டும் எனக்கோரும் மகஜர் உண்ணாவிரதத்தின் முடிவில் மாகாண ஆளுநர் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இதற்கிடையில் -

மேற்படி பிரதேச செயலகத்துக்கான வசதிகளை இன்னும் 10 நாட்களுக்குள் பெற்றுத்தருவதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார் என தமிழர் மகாசபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (7-14)

## மறியல் போர்

வவுனியா,மார்ச்21

வவுனியா - கோழிக்கூண்டு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் தம்மை சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கோரி நேற்று வவுனியா மாவட்டச் செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் நேற்றுக்காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டன. (ஐ-7-164)

## ஆசிரியகலாசாலை நேர்முகப்பரீட்சை

வலி.கிழக்கு,மார்21

கோப்பாய், பலாலி ஆசிரிய கலாசாலைகளுக்கு இவ்வாண்டு புதிய ஆசிரிய மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர்முகப் பரீட்சை யாழ்.கல்வி வலயத்தில் நேற்று முதல் நடைபெற்று வருகின்றது.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதம் கிடைக்காதவர்கள் நேர்முகக் குழுவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் உடனடியாக தொடர்பு கொண்டு எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்பாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மு.பரஞ்சோதி அறிவித்துள்ளார். (ஐ-180)


**கருத்தரங்கு**

| | | |
|---|---|---|
| கருப்பொருள் | : | "குடும்பத்தில் இளைஞர்" |
| கருத்துரை வழங்குபவர் | : | திரு சி.சிவதட்சணாமூர்த்தி<br>உதவி இயக்குனர்,<br>தேசிய இளைஞர் சேவைகள் மன்றம். |
| காலம் | : | இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை |
| நேரம் | : | பி.ப. 3.30 (பு.நே.) |
| இடம் | : | புனித அந்தோனியார் கோயில்,<br>மானிப்பாய். |

"அகவொளி" இயக்குநர்.

(74649)


## மரண அறிவித்தல்

திருமதி

**சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை**

அம்பனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மல்லாகத்தில் வசித்தவருமாகிய திருமதி சின்னத்தம்பி இலட்சுமிப்பிள்ளை அவர்கள் நேற்று (20.03.2000) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சிறீதரன் (ஆதித்தன்ஸ் கட்டட ஒப்பந்தகாரர், மல்லாகம்), பாஸ்கரன் (ஓமான்), பத்மாவதி (தாதி - திருகோணமலை) சிறீநாதன் (ICRC யாழ்ப்பாணம்), கருணாவதி (மல்லாகம்), ஜெகபதி (ஜேர்மனி), பூபதி (கொழும்பு), சிறீகாந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் புவனராணி, மதிவதனி, கார்த்திக், கலா, தர்மரட்ணம், பூபாலசிங்கம், பரமேஸ்வரன், பாலரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2000) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் பிற்பகல் 2.00மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டுவன் தொந்தனை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
சிறீதரன்
(மகன்)
(ஆதித்தன்ஸ் கட்டட ஒப்பந்தகாரர் - மல்லாகம்)

(C/11483)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.